
திராவிடநாடு
பொங்கல் இதழ்.
13...1...48

16-ம் பக்கத் தொடர்ச்சி

கண்கண்ட தெய்வம் என்று பாடுகிறுயே, உன் நலனுக்காகப் பேசிய தாயாரையே ஏசினுயே, முறையா, தகுமா? என்ன சொல்வான் பாடகன்; கோபிப்பான், அல்லது ஒரு அசட்டுச் சிரிப்புடன் காட்சி தருவான்;

அவனுவது, குறுக்குக் கேள்வியைக் கேட்டுக்கொள்வான், "பிரபஞ்சம் மாயை—காயம் அநித்யம்—செல்வம் நிலைக்காது—படாடோபம் கூடாது—பரோபகாரம் இதம் சரீரம்" என்று உபதேசம் செய்துவிட்டு, சீடகோடிகளின் மனதைப் பாகாக உருகும்படி செய்துவிட்டுப் பிறகு பல்லக்கேறி, பரிவார சகிதம் பவனி வந்து, காணிக்கை பெற்று, கனகாபிஷேகம் செய்து கொள்ளும், 'குரு'வைக் கண்டு, உபதேசத்துக்கும் உமது வாழ்க்கையின் கோலாகலத்துக்கும் பொருத்தமோ ஸ்வாமி! என்று கேட்டால் தெரியும், ஸ்வாமிகளின் மௌனமும், சீடகோடிகளின் சிற்றமும், போலீஸ் பிரவேசமும், தொல்லையும் பிரசாதமாகக் கிடைக்கும்.

நா[illegible] கடத்தப்பட்டவர்கள், அவர்களுடன் என்னென்ன கொண்டுபோனர்கள்?

தெமிஸ்டோகல்ஸ்:	....	80 டாலெண்ட்ஸ் (ரூ. 3,00,000)
ஓவிட்	....	திருத்தப்படவேண்டிய 15 புத்தகங்கள்.
டான்டே:	....	ப்ளாரன்ஸிலிருந்தவர்களுக்குக் கொடுக்கவேண்டிய கடன் ஜாபிதா.
இரண்டாம் ஜேம்ஸ்:	....	ஒருபெரிய முத்திரையச்சு.
டால்விரண்ட்:	....	அவனிடமிருந்த எல்லாவற்றையும்.
நேப்போலியன்:	....	அவனுடைய வாளை.
எம்மா ஹாமில்டன்:	....	49 பவுன்களையும், சில ஷில்லிங்குகளையும்.
பைரன்:	....	அவனுடைய 'டாக்டரை.'
மாஜினி,	....	அவனுடைய தாயின் படமோதிரத்தை.
லூயிபிலிப்பே:	....	ஒரு ஜதை நீலக்கண்ணுடிகளை.
எமிலி ஸோலா	....	அவன் குடும்பப் பணப்பையிலிருந்து பணமெல்லாவற்றையும் (சுமார் ரூ. 90.)
ஆஸ்கார் வைல்ட்:	....	மாதம் பத்துப் பவுன் வீதம் அனுப்புப்படி தன் மனைவியிடமிருந்து வாக்குறுதி.
ஹென்றி பூ ஈ: (சீனக் கடைசி இளவரசர்)	....	ஒரு முத்து மாலை.
ட்ராட்ஸ் கீ:	....	திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு அதிகாரப்பத்திரம்.
இரண்டாம் வில்லியம்:	....	பன்னிரண்டு மோட்டார் கார்கள்.
ஆல்பேர்ட் ஈன்ஸ்டைன்:	....	பரிசளிக்கப்பெற்ற வீணை.
ஆர்ச்ட்யூக் ஓட்டோ:	....	ஆஸ்திரேலிய கப்பற்படைக் கொடியொன்றும், ஹல்லாம் எழுதிய சட்டத்திற்கியைந்த இங்கிலாந்து தேச சரித்திரமொன்றும்.

மாற வேண்டும்.

"நம் நாட்டவர் கையிற் பொருள் கிடைத்தால் அது நம் பொதுமக்கட்குப் பயன்படப் போவதில்லை! நகைக்கும், துணிக்கும், ஊர்திகட்கும், சாதி இறுமாப்புச் சமய இறுமாப்புகளைப் பெருக்குவதற்கும், ஏழை எளியவர்களைக் கொடுமையாக நடத்துவதற்கும், தீயவொழுக்கங்களைச் செய்வதற்கும், இன்னும் இவைபோன்ற தீயவற்றிற்கும் அவரது பொருள் பயன்படுகின்ற நிலை மாறவேண்டும்."

—மறைமலை அடிகள்.

அண்ணவருக்கும்

வாழ்த்துக்கள்

புதிய வருஷத்திற்கு சேமிப்பின் அறிகுறி

பொங்கல்.

நல்வாழ்க்கைக்கும் கவலையின்மைக்கும்

இன்ஷ்யூரன்ஸ்

தமிழர்களிடையே பண்டைக்கால ஒத்துழைப்பு முறையை நூதன திட்டங்களுடன் இன்ஷ்யூரன்ஸ் முறையில் சர்க்கார் கண்காணிப்பில் வழங்கும்.

இந்தியா ஜப் பெனிபிட்
அஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்
தலைமை ஆபீஸ், கோயமுத்தூர்.

நிறுத்தாதே

"வெற்றி வீட்டுக் கதவு
திறக்கப்படவில்லையோ!
அதனுல் என்ன?
திரும்பிப் போவயோ!
இல்லை! தட்டு,
மீண்டும் மீண்டும் தட்டு
கதவு திறக்கப்படவில்லை
யாயினும்
தட்டுவதை நிறுத்தாதே!"

வங்காளக் கீதம்.

விலை அணா 2, ஆண்டு சந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 திராவிடநாடு இதழ் 32

தைப் பொங்கல்

வாழிய திருநாள் வாழ்கதைப் பொங்கல்
வாழிய திராவிட மணித்திரு நாடு
ஆரியக் கொடுமைகள் அழிந்திட ஆற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக.
மேழிச் செல்வம் கோழை படாதே
ஊழில் வழங்க வோங்குக பொங்கல்,
உழவர்கள் களிக்க உலகர் உவக்க
பொழிதரு வானம் பொய்யா நிற்க
செறிதகு செம்மைகள் செழுமையாய்க் கெழும
அறிவொளி பரவுக அறியாமை அழிக.
சாதிச் சண்டை சமயத் தொல்லை
பேதப் பேச்சு பேதைமை வழக்கம்
கேட்டை நல்கும் கீழ் மதிச் செய்கை
நாட்டை விட்டு வேரொடும் தொலைக
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
நன்மை வந்தெய்துக தீதெலாம் நலிக.
தன்மானங் காக்கும் தன்மானச் சங்கத்
தன்னேரில் கொள்கைகள் தழைத்து வளர்க.
தன்னர சமைக்க தக்கநற் பணிசெய்
மன்னிய திராவிடர் கழகம் திகழ்க.
வாழிய செந்தமிழ் வாழ்க நற் றமிழர்
வாழிய வள்ளுவர் வாழ்கநம் பெரியார்,
வாழ்க பேர்மகிழ்ச்சி சூழ்க பெருவாகை
வாழ்க தைப்பொங்கல் வாழ்க தமிழ்த்திருநாள்.

பொ. அருணசலம்.

மதிப்பில்லை--ஆனால்--மாளவில்லை!

★

"சாமி, வாங்கோ! என்னா சாமி இது, ஏழைங்கன்னாலே இப்படித்தானா செய்வது. முகூர்த்தவேளை தவறிப் போய்விடுமோன்னு மனசு பதறிப் போச்சிங்க" என்று கூறிக்கொண்டே, திருமணத்தை நடத்தி வைக்கவந்த புரோகிதர் சுந்தரராமாச்சாரியாரை, வரவேற்றான், அவர் வரத்தாமதமான கோபத்தால், அதற்கு ஐந்து நிமிஷத்துக்கு முன்பு அடுப்பறைப் பக்கத்திலே "அந்தப் பார்ப்பான், மகாதிமிரு. காலங்காத்தாலே எழுந்து, குளித்து, ஜெபதபம் செய்துவிட்டு, வருகிறவனா-மூணுநாள் கூடக் குளிக்காமல் இருக்கும் அனாச்சாரம் பிடித்தவன். இவனுங்களைக் கட்டி அழவேண்டி இருக்கு. என்னத்தைச் சாதிக்கிறானுங்க இவனுங்க வந்து. எரியற நெருப்பிலே நெய்யை ஊற்றிவிட்டு, எதையோ இரண்டு முணுமுணுத்துவிட்டு, எடுடா எட்டணா, கொடுடா ஒரு ரூபான்னு பணத்தைப் பிடுங்கித் தின்கிறானுங்க. நம்ப புத்தியைச் சொல்லவேணும், அவனுங்க மேலே என்ன தப்பு. ஏன் நாம்ப அவனுங்களைக் கூப்பிடவேணும். முகூர்த்தவேளை தவறிவிட்டாக்கூட, அதுக்கு ஏதாவது மந்திரத்தை முணுமுணுத்துவிட்டு, தோஷமில்லை என்று சொல்லிவிடத்தான் போகிறான்" என்று கோபமாகப் பேசிய குமாரலிங்கம்.

"ஏண்டாப்பா, நேக்குத் தெரியாதா, முகூர்த்தவேளை தவறப்படாதுன்னு. என் காரியத்திலே, ஏழைன்னும் பணக்காரன்னும் பார்க்கப்படுமோ! காலையிலே எழுந்து, பகவானுக்கு ஆகவேண்டிய காரியங்களைக் கவனித்துவிட்டு, இதோ ஓட்டம் பெருநடையா வந்து சேர்ந்தேன். உன்னைப்போன்ற தங்கமான மனுஷயாளை தவிக்கவிடுவேனா!" என்று உபசாரமொழி கூறினார், வீட்டிலே, இந்த முகூர்த்த விஷயமாக மனைவி நினைவூட்டி, சீக்கிரம் போகச் சொன்னபோது, "ஏண்டி, இப்படி விரட்டறே. என்ன குடிமுழுகிப் போகுது இப்போ. போனாப்போறது. அங்கே என்ன, அவன் கொட்டியளக்கப் போகிறான். எட்டணா எடடான்னா, ஏன் சாமி என்பான். இரண்டணாவை நீட்டி, இருக்கட்டும் சாமி, முடியுங்கோ, என்று அழப்போகிறான். இந்த இலட்சணத்துக்கு விழுந்தடித்திண்டு ஓடணுமோ. போகலாம், இரு. நீ போய், கொஞ்சம் நேக்குக் காப்பி போடு. அதுக்குள்ளே, சந்திரசேகர செட்டியார் ஆத்து கருமாதி என்ன தேதின்னு குறிச்சிண்டு இருக்கேன். அசடடி நீ! இந்தக் குமரன் வீட்டுக் கலியாணத்தைவிட, செட்டியார் வீட்டுக் கருமாதியிலேதான் நல்ல சான்சு." என்று பேசிய புரோகிதர் சுந்தரராமர்.

"ஐயர் வந்தாச்சி, சீக்கிரம் ஆகட்டும்டி, மனையைப் போடு, மாவிலையைக் கொண்டா, அரிசியை எடு, நெய்யைக் கொண்டு வா" என்று, பரபரப்புடன்பேசி, பம்பரம் போலச் சுழன்று வேலை செய்தாள், வேலாத்தா, குமாரலிங்கத்தின் மனைவி.

"டீ, கமலு! உங்க ஆத்திலே, தேங்கா மூடி தேவையா இருக்குமான்னு கேட்டுண்டு வாடி. அவர் கலியாணத்துக்குப் போயிருக்கார். தேங்கா வரும்" என்று புரோகிதர் மனைவி புவனேஸ்வரி பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் கூறிக்கொண்டிருந்தாள்.

ஓமம், புகையைக் கிளப்பிற்று. மணமக்களை, 'கவாத்து' வாங்கலானார் புரோகிதர்.

"மாப்பிள்ளே! எழுந்திருமய்யா, எழுந்து, பொண்ணோடை கையைப் பிடிச்சிண்டு, சுத்தும், மூணுதடவை" என்றார். மாப்பிள்ளை, அவ்விதமே செய்தார்.

"பரீட்சை ஆரம்பமாக இரண்டே வாரந்தான் இருக்கிறது. இதற்குள் டியுடர்பீரியட் முடித்தாகவேண்டும். ஆனதாலே, சனிக்கிழமை, எக்ஸ்ட்ரா கிளாஸ், மத்யானம் 2 மணிக்கு வரவேண்டும்" என்று ஆசிரியர் சொன்னபோது, "வரமுடியாது." என்று வாதிட்டு, மாணவர்களிடம் பிரசாரம் செய்து, வெற்றிகரமாக ஸ்ட்ரைக் நடத்திய வீரன்தான் மாப்பிள்ளை!

இங்கே, காரணம் கேட்காமல் 'கவாத்து' செய்கிறான். பொறுமைசாலியாகக் காட்சியளிக்கிறான்.

அவனுடைய பொறுமைக்கும், ஐயர், 'உலை' வைத்துவிட்டார், தமது அமுல் மூலம். கொஞ்சம் கண்டிப்பாக, ஆனால் மெல்லிய குரலில் சொன்னான், "சீக்கிரம் ஆகட்டும்" என்று. அந்தக் குரலிலே, இருந்த உறுதியை உணர்ந்தார் புரோகிதர். உடனே, அவர் கூப்பிடும் குரலைக் கேட்டதும், அவசர அவசரமாக நவக்கிரகங்கள் வந்தனர்—மந்திரங்கள் சுருங்கின—வேலையும் சுருக்காகவே முடிந்தது.

* * *

"அக்கா! தேங்காமூடி வேணும்."

"தர்ரேன். நீலாம்பரம், நாரவேணும் நேக்கு. அம்மாவிடம் சொல்லு"

"ஆகட்டும். தருவா. தேங்காயைக் கொடு"

"இரு. அவர் வரட்டும்."

"எப்ப வருவார்?"

"வந்திண்டே இருப்பார். ஏதோ ரெண்டு மந்திரத்தைச் சொல்லிவிட்டு, தாலியைஎடுத்துக்கொடுத்துவிட்டு வரவேண்டியதுதானே"

புவனேஸ்வரிக்கும் சிறுமி கமலாவுக்கும் இதுபோல் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கலியாண வீட்டுக்கு சில வீட்டுக்கு அப்பால் நடந்துவந்து கொண்டிருந்த புரோகிதர், அங்கு கிடைத்தவற்றை மூட்டையாக்கிச் சுமந்துகொண்டு வந்தமுத்தானிடம் "முத்தா! அந்தப் பய, சுருக்கா முடிச்சுடுன்னு சொன்னாண்டா. அது எப்படி சாத்யம். சொல்லவேண்டிய மந்திரத்தை எல்லாம், முறைப்படிச் சொன்னாத்தானே க்ஷேமம். எவ்வளவு காரியம் செய்யவேண்டி இருக்கு, ஒருகலியாணத்தை நடத்துவதன்னா! எல்லாவற்றையும் கிரமப்படிச் செய்யாமலிருக்கலாமோ?" என்று பேசினார்.

"அதுசரி, சாமி. மந்திரங்களைச் சரியாச் சொல்லாவிட்டா தோஷமில்லிங்களா?" என்றான் முத்தான்.

"அவாளுக்கு இது தெரியலையே. மந்திரங்களைச் சரிவரச் சொன்னாத்தானே அவாளுக்கு க்ஷேமம். சொல்லாப்போனா..........." என்று பேசிய புரோகிதரை இடைமறித்து முத்தான், "சொல்லவேண்டிய மந்திரத்தைச் சரியாகச் சொல்லாமப்போனா, உங்களுக்குந்தானே சாமி, தோஷம்." என்றுகேட்க, புரோகிதர், "ஆமாட...

(21-ம் பக்கம் பார்க்க)



"நீ கஷ்டப்படுவதைப் பார்க்கப் பார்க்க, என் மனம் தாளவில்லை. உனக்கு இதுபோன்ற சமயத்திலே உதவி செய்யாமலிருப்பது மனிதத் தனமாகுமா! பாழாய்ப்போன பணமா, பெரிது! இப்படிப்பட்ட நற்பணிக்குப் பயன்படாத பணம், எதற்கு? கேள், தருகிறேன்—கடன். எவ்வளவு வேண்டுமானாலும், கேள்."

"என் கஷ்டமிருக்கே, சொல்லித் தீராது. செலவு, ஒருவகை இரண்டு வகையல்ல. ஏராளமாகத் தேவைப் படுகிறது. உத்தமராகிய உமக்கு முழுப்பாரம் ஏன் தரவேண்டும்! தற்போதைக்கு, ஒரு நூறு ரூபாய் கொடுத்தால், சாப்பாட்டுக்குத் தேவையான சாமான்களைச் சேகரித்துக்கொண்டு, சாவு வராமல் தடுத்துக்கொண்டால் போதும். உயிர் இருந்தால்தானே, மற்றது. சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரம் எழுதவேண்டும்."

"கலங்காதே நண்பனே! நூறு ரூபாய்தானே — தருகிறேன். உணவுப்பொருள் வாங்கவா, இந்தப் பணம் தேவை?"

"ஆமாம் — சாப்பாட்டுக்குத்தான்."

"நிலம் இல்லையோ?"

"நிலம் இருக்கிறது, கரம்பு."

"கரம்பு, திருத்தினால் கழனியாகும்."

"கழனியுமாகும் தோட்டமுமாகும், நந்தவனமும் ஆகும், பாய்ச்சல் இருந்தால்!"

"ஆறு இல்லையோ?"

இரண்டு, உண்டு. ஒன்று காட்டாறு—வெள்ளம் புரளும் எப்போதாவது, சுற்றுப்புறமெல்லாம் அழிக்கும். மற்றொன்று வறட்டு ஆறு—தண்ணீரே கிடையாது."

"காட்டு ஆறு! கட்டுக் கடங்காத வெள்ளம்! ஊர் அழிகிறது! நண்பனே! அந்த வெள்ளத்தைக் கட்டுப் படுத்த, வழி உண்டு."

"வழி உண்டு—வக்கு இல்லையே! பணம், கொஞ்சமாகவா பிடிக்கும்!"

"எவ்வளவு செலவிட்டாலும் தகும். கரம்புகள் கழனிகளாகிவிட்டால், நெல் அம்பாரம் அம்பாரமாகக் குவியுமே. உணவுப் பஞ்சமே தலைகாட்டாது."

"உண்மைதான். பணம்........?"

"பணத்துக்கு என்னப்பா குறை! அது கிடக்கட்டும், சாப்பாட்டுக்கு, என்னென்ன வாங்கப் போகிறாய்?"

"அரிசி முக்கியமாக."

"கோதுமை, சத்துள்ளது. அது பிடிக்காதோ?"

"பழக்கமில்லை. ஆனால், இல்லாத கொடுமைக்கு அதையாவது சாப்பிடவும் தயார்தான்."

"நீ, என்னிடம் நூறு ரூபாய் கடன் வாங்கி, அரிசி விலைக்கு வாங்குவதை விட, கோதுமையே தருகிறேனே, கடனாக."

"தங்கமான யோசனை—அப்படித்தான் செய்யுங்களேன்."

"கடன் தொகையைக் கூடத் திருப்பித் தர உனக்கு ஒருயோசனை கூறுகிறேன்— நீ நல்ல மனுஷன். ஆகையாலே சொல்கிறேன்........"

"காலம் கொஞ்சம் சுபிட்சமானதும், கஷ்டப்பட்டு வேலை செய்து, எப்படியாவது, கடனைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்."

"அதிலே, எனக்குச் சந்தேகமே கிடையாது. ஆனால், நீ, ஏன் அவ்வளவு கஷ்டப்பட வேண்டும். சுலபமான வேறு வழி இருக்கிறது. உன் கரம்பு இருக்கிறதே, அதைக் கழனியாக்கி, விளைச்சல் ஏற்படச் செய்து, செலவுபோக, மிச்சமிருப்பதில், கடனை எடுத்துக்கொண்டு, மீதியாவதை உனக்கேகூடத் தந்துவிடுகிறேன்."

"முடியுமா!"

"முடிகிறதா இல்லையா என்று பாரேன்! ஒருவரி எழுதிக்கொடுத்துவிடு—உன் கரம்பு நிலத்தைக் கழனியாக்கும் பொறுப்பை, என்னிடம் ஒப்புவிப்பதாக — அது போதும். இப்போது நூறு ரூபாய், கடனாகக்கூடப் பெறவேண்டியதில்லை, இனி, உனக்குக் கிடைக்க இருக்கும் இலாபத்திலே, முன்பணமாக நூறு ரூபாய் பெற்றுக்கொண்டதாகவே, ஏற்பாடு செய்துவிடுவோம். கடன் படுவானேன் — கலங்குவானேன். வெண்ணெயை உருக்கினால் நெய் தானாகக் கிடைக்கிறது."

* * *

கரம்பு கழனியாயிற்று! இருபோகம் விளைந்தது. அந்தக் காரியத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, முன் பணம் நூறு ரூபாய் கொடுத்தவரிடமிருந்து, கழனியின் சொந்தக்காரருக்கு, ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் இது.

ஐயா,

நமது ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஷரத்தின்படி, கரம்பு கழனியாகிவிட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காகச் செலவு, இதுவரை ஆகியிருப்பது, 3500 ரூபாய், என்பதற்கு விவரம் தந்திருக்கிறேன்— ஆதார ரசீதுகளும் இணைத்திருக்கிறேன்.

புதிய யந்திரம் 2,000 ரூபாய்

உரம் 500 ரூபாய்

நிர்வாகச் செலவு 500 ரூபாய்

வரப்புத் தகராறுக்காகக் கிளம்பிய வழக்குக்குச் செலவிட்டது. 500 ரூபாய்.

இந்த கழனியின் விளைச்சலில், கிடைத்த தொகை ரூ. 1700

இந்த ஆண்டு நடைமுறைச் செலவுக்காக, இதிலே 700 ரூபாயும், யந்திரத் தேய்வுத் தொகைக்காக 300 ரூபாயும், ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

மீதமிருக்கும், 700 ரூபாயில்,

பாதி பாகமாகிய 350ல், தங்களுக்கு முன் பணமாகத் தந்த 100 போக, உள்ள 250ல்,

கிராமாபிவிருத்திச் சங்கதிக்கு 50 ரூபாயும், கால்நடைக் கண்காட்சி நடத்த 75 ரூபாயும் போக, மீதமிருப்பதை, எனது பாங்கியில் பெற்றுக்கொள்ள அனுமதி அளிக்கிறேன்.

இந்தக் கடிதமே அதற்குரிய அத்தாட்சிப் பத்திரமாகும்.

தங்கள் க்ஷேமாபிவிருத்தியில் சிரத்தைகொண்ட,

சீராளன்.

* * *

மூன்றாமாண்டு, கடிதம் அல்ல, வக்கீல் நோட்டீஸ் வந்தது, செலவு அதிகமாகி வரவு குறைவதால், கழனிச் சொந்தக்காரர், அந்தத் 'துண்டு'ப் பணத்தைத் தரவேண்டுமென்று. நான்காம் ஆண்டு, அந்தக் கழனியில், வேலை பார்க்கும் மேஸ்திரியானார், மாஜி சொந்தக்காரர்.

* * *

இப்படிப்பட்ட கடன் கொடுக்கும் 'கைங்கரியம்'—இன்றைய அமெரிக்காவின் திட்டம். யாருக்கும், எதற்கும், எவ்வளவு கேட்டாலும்!!

அணுகுண்டு கூட இன்று அவ்வளவு ஆபத்தான ஆயுதமல்ல—பணகுண்டு, பார் முழுவதும் பாய்கிறது.

அமெரிக்க நாட்டு 'சீராளர்கள்'—சீனா, இந்தியா, பர்மா, சயாம், ஈராக், ஈரான், எகிப்து, துருக்கி, கிரீஸ், பிரான்ஸ், பிரிட்டன், போன்ற இடமெல்லாம் செல்கிறார்கள்.

அங்குள்ள நிலவளம், நீர்வளம், குடிவளம், ஆகியவைபற்றிப் பாராட்டுகிறார்கள். அந்தச் சமயத்தில் யார் நிர்வாகத்தில் இருக்கிறார்களோ, அவர்களை, 'வானளாவ'ப் புகழ்கிறார்கள். விவசாயம் வளமாக, தொழில் பெருக, விஞ்ஞானம் வீறிட்டு எழ, ஜனநாயகம் தழைக்க, நாட்டின் அருமை பெருமை உலகுக்குத் தெரிய, வழிகூறுகிறார்கள்—திட்டம் தருகிறார்கள்—அந்தத் திட்டங்களை நிறைவேற்றப் பணம் தருகிறார்கள்—கடனாக!

நிபுணர்கள் வேண்டுமா?—தருகிறார்கள்! யந்திரங்கள் தேவையா? அடுத்த கப்பலில்!! இலாபகரமாகத் தொழில் நடைபெறுமோ இல்லையோ என்று சந்தேகம் தோன்றுகிறதா? அந்தச் சந்தேகத்தைப் போக்க, 'கூட்டு'த்தொழில் முறைக்கும் இணங்குகிறார்கள்.

தாசிஅபரஞ்சி கதையில் கண்டோமே காட்சி "நேற்றிரவு கனவிலே அபரஞ்சியுடன் குலவினேன்" என்று சொன்ன உடனே, "அப்படியானால் ஆயிரம்பொன்கொடு"என்று அபரஞ்சி கேட்பதாக; அதுபோல, ஆனால் கொடு என்று கேட்பதற்குப் பதில், 'பிடி' என்கிறார்கள் அமெரிக்கர்கள். "மூலதனம் சரியானபடி போட்டு, நவீனக்கருவிகளை உபயோகித்து, நிபுணர்களின் திட்டங்களைக் கடைப்பிடித்தால், இந்தத் தொழில் பெருகும்" என்று உலகிலே எந்தப் பகுதியில் யார் பேசினாலும், அந்தப்பகுதியில் வட்டமிடும் அமெரிக்கர், முதல் அயிட்டம் எவ்வளவு தேவை? இரண்டாவது அயிட்டத்தின் விவரம் என்ன? மூன்றாவது அயிட்டத்துக்கு எவ்வளவு பேர் வேண்டும்? என்று விசாரிக்க முற்படுகிறார்! அவ்வளவு ஜரூர்!

டாலர், இன்று, பல பகுதிகளிலே படை எடுத்த வண்ணமிருக்கிறது. பல இடங்களிலே வரவேற்புத்தான். வருமுன் காப்போர் கூட்டம் தவிர, மற்றவர்கள், டாலர் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு விட்டனர்.

எகிப்திலே, டாலர், பத்திரிகாலயங்களிலே புகுந்துகொண்டு, வேலை செய்கிறது.

கிரீசிலே, டாலர், அரசகுடும்பம் முதற்கொண்டு ஆலயம் வரையிலே புகுந்துகொண்டு வேலை செய்கிறது.

ஈரானில்,எண்ணெய்க்கிணறுகளை, டாலர் தோண்டியவண்ணம் இருக்கிறது.

சீனாவிலே, டாலர், உள்நாட்டுப் போர்ப்புகையை அதிகப்படுத்தியபடி இருக்கிறது. அமெரிக்கப்பணம் பாய்கிறது! சீனப்பிணம் குவிகிறது!

இந்தியாவிலே, பிர்லா டாடாக்களின் மாளிகைகளிலே, விருந்தாளியாக இருந்துகொண்டு, தன் வேலையை வெற்றிகரமாகச் செய்து வருகிறது, இந்த டாலர்!

ஜெனரல் தெகோலுக்கு, பிரான்சிலே, டாலர், பக்கபலமாக நிற்கிறது!

ஐக்யநாடுகள் சபையிலே, பல நாட்டு பாராளுமன்றங்களிலே, டாலரின் சத்தமே, பலமாகி விட்டது! இந்த—டாலர் ஆதிக்கம், அமெரிக்காவின் 'கடன்கொடுக்கும் திட்டம்' எவ்வளவு ஆபத்துக்கு அச்சாரமாகிறது என்பதை மக்கள் உணராதபடி தடுக்க, ஒவ்வொரு நாட்டிலும், பத்திரிகாலயங்களில், டாலர் பசப்பிப் பேசுகிறது.

சீனாவை, ஜப்பான் சிதைக்கிறது என்பது கண்டு, சுதந்திரப்பிரியர்கள், சீறினர். நியாயமான சீற்றம். சீனாவின் வீழ்ச்சியைத் தடுத்தாக வேண்டும் என்று நல்லறிவாளர்கள் கூறினர். நயவஞ்சகமாக, ஐரோப்பிய வல்லரசுகள் நடந்துகொள்கின்றனவே, பழம் பெருமைவாய்ந்த சீனா, நசித்துக்கொண்டிருக்கிறதே, என்று குமுறினர். ஜப்பான் தோற்றது. சீனா?—சுதந்திர நாடாகிவிட்டது! சுதந்திரகீதம், எப்படி இருக்கிறது? வட்டமிடும் விமானத்தின் வீறிடும் சத்தம், விழும்குண்டுகள் வெடிக்கும் சத்தம், சாகும் சீனர்களின் கடைசி மூச்சு, இடையிடையே சியாங்கே ஷேக்கின் பெருமூச்சு—இவ்விதமிருக்கிறது, சீனாவின் விடுதலைக்கீதம். இந்தக் கீதத்துக்குச் சுருதி கூட்டுவது, டாலர்! டாலர், சூதுசூழ்ச்சியாக, விமானம் வெடிகுண்டாக, விஷப்புகையாக, பல்வேறு அழிக்கும் பொருள்களின் வடிவிலே, சீனாவில்குவிகிறது. 1946 ஜூலையிலிருந்து ஆகஸ்ட்டுக்குள், 400 கோடிடாலர் பெறுமானமான பொருள்கள், அமெரிக்காவிடமிருந்து, சீனாகடனாகப் பெற்றிருக்கிறது. என்னபொருள்? புதிய யந்திரமா, நிலத்துக்கான உரமா, தொழில் வளம் பெருகும் விஞ்ஞானக்கருவியா? அல்ல! சீன, உள்நாட்டுப்போரில், சியாங்கே ஷேக்கிடமுள்ள 72-டிவிஷன்கள் கொண்ட பெரும்படைக்கு ஆயுதங்கள், அமெரிக்கா தந்திருக்கிறது. தேவையான விமானஉதவிதர, 1946 நவம்பரிலே, ஒப்பந்தம் செய்திருக்கிறது.

மக்களில் பெரும் பகுதியினர், சியாங்கின் ஆட்சியை விரும்பவில்லை. ஜப்பானிய ஆதிக்கத்தை அந்த நாளிலே எதிர்த்தவர், எதிர்ப்புச் சக்தியைத் திரட்டியவர், எதிர்ப்புச் சக்திக்குத் துணைபுரியும்படி, ஐரோப்பிய வல்லரசுகளை உடனிருக்கச் செய்தவர், என்பது தான், சியாங்குக்கு உள்ள செல்வாக்குக்கு அடிப்படை. ஆனால், அவருடைய பட்டலிசம் இந்த அடிப்படையைப

பெயர்த்து விட்டது. பொது உடைமைக் கட்சியின் ஆளுகையைச் சீனாவின், குறிப்பிடத்தக்க பகுதி, ஏற்றுக்கொண்டதுடன், சியாங்கின் படைகளுடன் போரிடுகிறது. இந்தப் போர்கிளப்பியுள்ள புகைப்படலத்தைத் துணைகொண்டு, அமெரிக்கா, சீனாவில் தன் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொண்டிருக்கிறது.

* * *

“சண்டை இன்னமுமா ஓயவில்லை?”

“ஆமாம்! சிகப்புக்கொடிக்காரர்கள் சிற்றெறும்புக் கூட்டம்போலக் கிளம்பியபடி உள்ளனர்”

“அடக்க முடியாதோ?”

“முடியும் —தக்க ஆயுதபலத்துடன் தாக்க வேண்டும்.”

“தாக்குவதுதானே! எத்தனை காலத்துக்குத்தான் இந்தக் குழப்பத்தை விட்டு வைப்பது. உலகத்தார், என்ன எண்ணுவார்கள் — உமது திறமை, யோக்யதை, செல்வாக்கு, இவைகளெல்லாம்கூட அல்லவா, சந்தேகிப்பார்கள்.”

“ஆமாம். சியாங்கேஷேக், திணறுகிறார் என்றுதான் உலகம் பேசுகிறது”

“என்மனம் கேட்கவில்லையே, இந்த இழிசொல், என் நண்பனுக்கு ஏற்படுவதுகண்டு.”

“இருக்கட்டும். ஆயுதபலத்தோடு தாக்கி அவர்களை நிர்மூலப்படுத்துகிறேன்.”

“அதுதான் சரி. சீக்கிரம் செய்து முடிக்கவேண்டும். முடியாவிட்டால், நாட்டை அவர்களிடமாவது விட்டுவிடவேண்டும்.”

“அது எப்படி முடியும்? என்வீரதீர பராக்கிரமம் என்ன!........”

“ஆமாம்—அது பழங்கதையாக அல்லவா போகிறது.”

“ஆயுதம் தேவையான அளவு கிடைத்தால், இந்தக் கேலிப் பேச்சுக்கு இடமே ஏற்பட்டிராது”

“ஆயுதம், உற்பத்தி செய்வதுதானே!”

“ச[illegible] இல்லை[illegible]”

“சரி! நான் தருகிறேன். சீனா, உள்நாட்டுக் குழப்பத்தில் சிக்கிச் சீரழிவதையும், அது கண்டு, நீர் சிந்தை நொந்தவராய் இருப்பதையும் பார்க்கச் சகிக்கவில்லை. தேவையான ஆயுதம், கடனாகத் தருகிறேன்.”

“உமது நாட்டிலே தொழிலை வளமாக்கி, வியாபாரத்தை விருத்தி செய்து, இலாபம் திரட்டி, அந்தப் பணத்தைக் கொண்டு பைசல் செய்தால் போதும்”

“நிச்சயமாகச் செய்கிறேன்.”

“ஆனால், அதற்கு ஆள்பலம் வேண்டும்.”

“சீனா பெரியநாடு. ஜனத்தொகை ஏராளம்.”

“உண்மை. ஆனால் போரிலே ஈடுபட்டுள்ள மக்கள், புதுத்தொழில் வளம் ஏற்படுத்த, உழைக்க முடியாதல்லவா?”

“ஆமாம்—அதுவும் உண்மைதான்.”

“ஆயாசப்படாதே! அதற்கும் ஒரு வழி சொல்கிறேன். நான் தரும் ஆயுதபலத்தைக் கொண்டு, நீ, சண்டையை மும்முரமாக நடத்திக்கொண்டிரு, அதேபோது, உன்நாட்டிலே நடைபெறவேண்டிய, தொழில், வியாபார காரியங்களை நான், செய்து கொண்டிருக்கிறேன். உன் வேலை முடிந்தபிறகு, ஓய்வாக உட்கார்ந்து கணக்குப் பார்ப்போம்— பிறகு, பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்கும் வேலையைக் கவனிப்போம்.”

“சரி. அவர்களிடம், புதுரகவெடி விமானம் உண்டா?”

“கிடையாது”

“உனக்கு, நான் தருகிறேன்; பயப்படாதே!”

“கப்பல் வேண்டும்”

“தருகிறேன்”

* * *

“சீனத்தலைவருக்கும் அமெரிக்கச் சீமானுக்கும், உரையாடல், இதே முறையிலே இல்லாவிட்டாலும், இந்தக் கருத்துக்கு ஏற்றபடி நடந்தேறியதால் தான், இன்று, அங்கு, அமெரிக்கத் தளவாடங்களும், இராணுவ நிபுணர்களும், குவிந்து சீனப் பிணங்கள் குவியும்நிலை ஏற்பட்டிருக்கிறது. சியாங் படை வரிசையிலே இதுவரை 110 டிவிஷன்கள்நாசமாகிவிட்டனவாம். சீன இரத்தம், சீன மண்ணில்!! சீனமக்கள் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொல்கின்றனர். ஒருபுறம் டாலர்! மற்றோர் புறம் ரூபிள்! சீனாவுக்கு, இரத்தவெறிக்கு ஏற்ற ஆயுதங்களைக் கடனாகக்கொடுத்துவிட்டு, அமெரிக்கா அங்கு, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் 100க்கு 80 பாகத்தைத்தன் கரத்திலே வைத்துக் கொண்டிருக்கிறது. ஷாங்காய் நகரிலே, அமெரிக்கச் சாமான்கள் குவிந்து கிடக்கின்றன! சீனத் தொழில்கள் முடங்கியுள்ளன. பட்டு, பீங்கான், ஆகிய சாமான்கள் தயாரிக்க மட்டும், அமெரிக்க முதலாளிக் கும்பல், 50 கோடி டாலர், மூலதனம் போட்டிருக்கிறார்கள் சீனாவில். மின்சார அபிவிருத்தித் திட்டத்திலிருந்து மீன் பிடிக்கும் தொழில் அபிவிருத்தித் திட்டம் வரையிலே, அமெரிக்காவின் ஆதிக்கம் புகுந்திருக்கிறது.

சென்ற நூற்றாண்டிலே, பிரிட்டன் படைபலத்துடன் கிளம்பி, தன் ஆதிக்கத்தைப் பரப்பிற்று— இந்த நூற்றாண்டு, அந்தக் காரியத்தை அமெரிக்கா டாலர் மூலம் செய்கிறது. மார்ஷல் திட்டம் என்ற பெயருடன் நடைபெறும், முதல்தரமான ஆதிக்கவேட்டைக்கு

எது பூஜை?

“ஜபமாலை உருட்டுவதைவிட்டு விடு; அத்துடன் பாட்டையும் மந்திரத்தையும் விட்டு விடு; தாளிட்ட கோயிலில் இருண்ட மூலையில் யாரைப் பூஜிக்கிறாய்? கண்களைத்திற, கடவுள் உன்முன் இல்லை என்பதை அறி. நெற்றி வியர்வை நிலத்தில் விழப்பாடுபடும் பாட்டாளி மக்களிடமும், ஏழை விவசாயிகளிடமுமே கடவுள் இருக்கிறார். அவர்களுடன் வெயிலிலும் மழையிலும் உழைத்து அவருடைய ஆடையில் தூசி படிந்திருப்பதைப் பார். ஆகவே நீயுங்கூட உன் காஷாயத்தை விலக்கி, மண்ணில் வந்து உழைக்கவா. கடவுளின் அருள் உனக்குக்கிட்ட இதைவிடச்சுலபமான மார்க்கம் கிடையாது.”

கவி. தாகூர்.

இந்திய துணைக்கண்டமும் இலக்காகி விட்டது.

மாவீரன் அலெக்சாண்டரின் தந்தை பிலிப், எனும் மாசிடோனிய நாட்டு மன்னன் கூறுவானாம், "ஒரு நகரத்தைக் கைப்பற்ற வேண்டுமானால், வேறொன்றும் செய்யவேண்டாம்; ஒரு கழுதை மீது, பொன் நிரம்பிய மூட்டையை ஏற்றி, அனுப்பு—போதும் — நகரம் நம் வசமாகும்" என்று.

அமெரிக்கா, பணத்தைக் கழுதை மீது ஏற்றி அனுப்ப முடியாது—கடல் குறுக்கிடுவதால் — எனவே மார்ஷல் மூலம், கிரேடி மூலம், டாட்டா, பிர்லா மூலம், டாலர்களை அனுப்பிவைக்கிறது.

டாலருக்குள்ளே, சுகமும் சுபிட்சமும், உணவும் உடையும், நோய் தீர்க்கும் மருந்தும், தொழில் பெருக்கும் சாதனமும் இல்லை, வேட்டு, வெடிகுண்டு, விஷப்புகை விமானம், கப்பல், வேறுபல போர்க் கருவிகள் உள்ளன.

பரந்த இடம், பழம் பெருமை பேசும் இடம், பலகாலமாகப் பிரச்னைகளை, சிக்கல்களைத் தீர்க்காமல், மூடிவைத்துள்ள இடம், எது என்பதை மோப்பம் பிடித்துக் கண்டறிந்து, டாலர் படை எடுக்கிறது.

ஒத்த அனுபவம் படைத்த பிரிட்டனே, அமெரிக்காவிடம் சிக்கித் திண்டாடுகிறது, என்றால், 'ஓம் சாந்தி'யில் பழக்கப்பட்ட இந்திய துணைக்கண்டம், என்ன செய்யும்! கிரேடியின் முகத்திலே கருணை விலாசம் இருக்கிறது என்று இந்திய அரசியல் தலைவர்கள் பேசுகிறார்கள்! இந்தியாவிலே உள்ள இயற்கைச் செல்வத்தை, அமெரிக்க உதவி கொண்டு, பெருகச் செய்யலாம், என்று 'நிபுணர்கள்' பேசுகிறார்கள்-இங்கும் சரி-அமெரிக்காவிலும் சரி! டாலருக்குள், என்னென்ன மறைந்துள்ளன, என்பதை மக்கள் உணராதபடி, பிரசாரம் பலமாக நடத்துகிறார்கள்.

இந்திய துணைக்கண்டத்தின் தொழில்வளம், இன்று, ஒரு பத்துக் குடும்பத்தாரிடம் இருக்கிறது-டாட்டா, பிர்லா, பஜாஜ், வால்சந்த் போன்றவர்கள். இவர்களின் நேசம், அமெரிக்காவுக்குக் கிடைத்துவிட்டது. பல, தொழில்களிலே, இவர்கள், அமெரிக்கக் கம்பெனிகளுடன் 'கூட்டு' ஏற்படுத்திக் கொண்டுவிட்டனர். எனவே டாலரின் ஆதிக்கத்துக்கு, இங்கு தங்குதடை இல்லை.

அமெரிக்காவின் பொருளாதாரத் துறை 8-குடும்பத்தாரிடம் அடக்கம் என்பது, மறுக்கப்படாத உண்மை.

மார்க்கன்
ராக்பெல்லர்
போண்ட்
மெல்லான்
கூன்லாய்ப்
சிகாகோ
கிளிவ்லாந்து
போஸ்ட்டன்.

எனும் 8 குடும்பத்தாரிடம், அமெரிக்காவின், ஜீவநாடிகள் உள்ளன. 1943-ம் வருஷக் கணக்குப்படி, இந்தக் குடும்பத்தாரின் ஆதிக்கத்திலுள்ள கம்பெனிகளின் இலாபம் 1000 கோடி டாலர்! 1947-ல் 1500 கோடியாக இந்த இலாபம் பெருகுமாம்.

போர்க்காலத்திலே, மலைமலையாக இலாபம் குவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணம், இப்போது, பல நாடுகளில் ஆதிக்கம் தேடித்தரும் பட்டாளமாகிவிட்டது!

பிரான்சுக்கு மட்டும், 1946-ம் வருஷம் மே மாதத்தில், 72 கோடி டாலர், கடன்கொடுத்திருக்கிறது, அமெரிக்கா.

கடன்கொடுத்த கருணை உள்ளம் மேலும் என்ன செய்தது? அதுதான் சிராளன் திட்டத்திலுள்ள சூட்சமம். கடன்பெற்ற பிரான்ஸ், அமெரிக்காவிடம் சில பண்டங்களை விலைக்கு வாங்கியாக வேண்டும் என்று ஒப்பந்தம். இந்த ஒப்பந்தப்படி, 7½ இலட்சம்டன் நிலக்கரிவாங்கிற்று. விலை, டன் ஒன்றுக்கு 22 டாலர். ஆனால், பிரான்சுக்கு அருகே உள்ள ரூர்பிரதேசத்தில் நிலக்கரியின் விலை டன்ஒன்றுக்கு 11 டாலர்—சார் பிரதேசத்தில் 8 டாலர்!!

கிரீசுக்கு 40 கோடி டாலர் கடன் தரப்பட்டிருக்கிறது. மேலும் பல ஐரோப்பிய நாடுகளுக்குக் கடன்தருவதுதான் மார்ஷல் திட்டம். பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், ஹாலாந்து போன்ற 16 நாடுகள், கடன்பெற இணங்கி விட்டன. ரஷியாவும், ரஷிய செல்வாக்கு மிகுந்த எட்டு நாடுகளும் மார்ஷல் திட்டத்தை ஏற்க மறுக்கின்றன. டாலர், இந்த அளவுக்கு ஆதிக்கம் பெற்றுள்ள நேரத்தில் இந்திய துணைக்கண்டத்தின் விடுதலைவிழா நடந்தேறியது. அமெரிக்கக் கோடீஸ்வரர்களும் இந்தியத் துணைக்கண்டத்து முதலாளிகளும், கூட்டாகச் சுரண்டல் முறையை நடத்தத் திட்டமிட்டு வேலைசெய்கின்றனர். மார்ஷல் கடன் கொடுக்கிறார்! பிர்லா, 'கூட்டு' அமைக்கிறார்! படேல் அமுல் நடத்துகிறார்! பகவான் இருக்கிறார் பயப்படாதீர்கள் என்று கூறி 'மகாத்மா' பஜனை நடத்துகிறார்.—டாலர் சிரிக்கிறது—சீனாவுக்கு அருகிலேயே, மற்றோர் சீனா கிடைக்கிறதே என்று. சிந்திக்க, நேரமில்லை, விடுதலைச் சிந்து பாடிடும் நேயர்களுக்கு. அவர்களின் சிந்தனையைக் கிளறவே, டாலர், கொண்டுவந்து சேர்க்கும் பொருள்கள் எவை எவை என்பதைக் காட்டும் சித்திரத்தை வெளியிட்டிருக்கிறோம். சீற்றம் இல்லாத வேளையில், சிறிதளவு உலகச் சூழ்நிலை பற்றிய கவனத்தோடு, சிந்திக்க வேண்டுகிறோம்.

தெரியுமோ!

81, நகர சபைகளில், 35 மட்டுமே குடிதண்ணீர்வசதி நல்லமுறையில் இருக்கிறது.

997 பஞ்சாயத்து நிர்வாகங்கள் உள்ளன. இவற்றிலே 12 பஞ்சாயத்துகளில் மட்டுமே நல்ல குடிதண்ணீர் இருக்கிறது.

சாக்கடைத்திட்டம் 7 நகரசபைகளிலே மட்டும் உள்ளன.

ஆனால்எல்லா இடங்களிலும் முனிசிபல் கவுன்சிலர்கள் இருக்கிறார்கள்!!

ஒவ்வொரு நாளும் அறிவுத் துறையில் வளர்ந்து கொண்டிருக்கிற மனிதனைப் பற்றித்தான் நான் கவலைப்படுகிறதே தவிர மற்றவர்களைப்பற்றி நான் கவலை கொள்வதில்லை.

லிங்கன்.

ஒருவனைப்பற்றிச் சந்தேகப்பட்டால் அவனை வேலைக்கு அமர்த்திக்கொள்ளாதே; வேலைக்கு அமர்த்திக்கொள்வதென்றால் அவனைப்பற்றிச் சந்தேகப்படாதே.

கன்பியூசியஸ்.

இடமும் இயல்பும்

23-ம் பக்கத் தொடர்ச்சி

களும் அமையும்; நடைமுறைக்கு அந்த முறைதான் பயன்படும்.

அரேபியா மணற் காட்டிலே, நாளைக்கு இரு வேளை குளிக்கவேண்டுமென்ற ஏற்பாடு இருக்கமுடியாது, இருந்தாலும் நடைமுறைக்கு ஏற்றதாகாது.

இடத்துக்கேற்றபடி இயல்பு அமைவதும், அங்ஙனம் அமைந்துள்ள இயல்புக்கேற்றபடி பல்வேறு இனங்களின் கலாசாரம் காணப்படுவதும், அந்தந்தக் கலாசாரத்திற்குத் தக்கபடி, சட்ட திட்டங்கள் அமைக்கப்படுவதும், எங்கும் காணப்படும் பொது விதி. சில விலக்குகள் இருக்கலாம், ஆனால் பொதுவிதி பொய்யாவதில்லை.

கார்ல்ரிட்டர் எனும் நிபுணர், பூகோள அமைப்புக்கேற்ப, இனங்களின் இயல்பும் அமைந்து விடுகிறது என்ற விஷயத்தை ஆராய்ந்தறிந்துரைத்தார். கார்ல்ரிட்டர் ஓர் ஜெர்மானியர்.

சுறுசுறுப்பு, வீரம், எனும் பண்புகள் ஒரு இனத்துக்கு இருக்கிறது. வேறோர் இனம் சாந்தம், சீலம் எனும் பண்புகளையே பெரிதும் பெற்றிருக்கிறது. ஏன் இந்த நிலை?

ஹிப்போக்ரேடிஸ் என்பவர், இதற்கு, அந்தந்த இனம் வாழும் இடத்திலே உள்ள பருவப்போக்குக் காரணம் என்று கூறுகிறார். சுறுசுறுப்பும் வீரமும் பண்புகளாக அமையவேண்டுமானால், மனதுக்குக் கிளர்ச்சியூட்டக் கூடிய, சீதோஷ்ண நிலை அந்நாட்டிலே இருந்தாக வேண்டும். இயற்கையைப் போரிட்டு அடக்கிமட்டுமே வாழக் கூடிய நிலை ஒரு நாட்டுக்கு இருப்பின், அந்த நாட்டு மக்கள், சுறுசுறுப்பும் வீரமும் சுபாவமாகப் பெற்றுவிடுவார்கள் என்று கூறுகிறார்.

நாமும் காண்கிறோம்; குளிக்க ஏரி குளம் ஆறுகளை நாடும் நிலைமை கிராமவாசிகளுக்கு இருக்கிறது, குழாய்நீரோடு திருப்தி அடைவது பட்டணவாசிகளுக்குச் சுபாவமாக இருக்கிறது. பட்டணவாசிகளுக்கு நீந்தத் தெரிவதில்லை, கிராம மக்களுக்குத் தெரியும், அதிலே தென்புங்கூட அவர்களுக்கு. இயல்புக்கு இடம் பெரிதும் பொறுப்பாகி விடுகிறது.

இந்த முறையான ஆராய்ச்சி செய்து அரிஸ்டாடில் எனும் கிரேக்க அறிஞர், வடஐரோப்பாவிலே உள்ள மக்கள், எழுச்சியுள்ளவர்களாக இருக்கிறார்கள்; ஆனால், புத்தி கூர்மை இல்லை. காரணம், அந்தப் பகுதியிலே; உள்ள குளிர்ந்த சீதோஷ்ண நிலைதான், என்றும்; ஆசியா கண்டத்து மக்கள் கூர்மையான அறிவுபெற்றுள்ளனர், ஆனால் மனக்கிளர்ச்சி அவர்களிடம் மட்டமாக இருக்கிறது. அதனாலேயே, அந்தப் பகுதியிலுள்ள மக்கள், அடிமைப்பட்டுக் கிடப்பினும் திருப்தியோடுஉள்ளனர் என்றும் கூறி, கிரேக்க மக்கள், இந்த இரு இயல்புகளுக்கும் இடையே உள்ள இயல்பினர், எனவே உலகாள உரிமை அவர்களுக்கு இருக்கிறது, என்று கூறினார். நாட்டுப்பற்று இவருடைய இந்த முடிவுக்கு ஓர் காரணம் என்ற போதிலும், தட்ப வெட்ப நிலைக்கேற்ப மக்களின் மனநிலை அமைகிறது என்ற அவருடைய ஆராய்ச்சி தவறல்ல; உண்மையே.

ஒவ்வோர் இடத்துக்கும் இயற்கையாக அமைந்துள்ள தன்மைகளைக் கூட, இன்று வளர்ந்துள்ள அறிவின் துணைகொண்டு, இப்போது மாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஒட்டகமோட்டிகளாக மட்டுமே இருந்து தீரவேண்டிய நிலையில் இன்றுள்ள சஹாரா பாலைவனப் பிரதேச மக்களை, இன்னும் சில வருஷங்களுக்குப் பிறகு விவசாயிகளாக்கி, ஆடு மாடுகளை வளர்ப்பவர்களாகவும், பாலாடை வெண்ணெய்தயாரிப்பவர்களாகவும், பூந்தோட்டம் பழத் தோட்டம் அமைப்பவர்களாகவும், அவர்களின் தொழிலை, வாழ்க்கை முறையை இயல்பையே மாற்றிவிட முடியும், அந்தப் பாலைவனத்திலே, பாய்ச்சல் கிடைக்கும்படி செய்து, மணற் காட்டைக் கழனிகளாக்கிவிட்டால்! இது கற்பனையுமல்ல. நிபுணர்கள் இன்று தயாரித்துக்கொண்டு இருக்கிறார்கள், இதற்கான திட்டத்தை. எனவே இடத்தின் நிலைமையை மாற்றிவிடக்கூடிய இந்தக் காலத்தில், இயல்பும், அதனுடன் மாறத்தான் செய்யும். ஆனால் அப்போதும் இடத்துக்கேற்ற இயல்பு என்ற பொதுவிதி பொய்பாவதில்லை. புதிதாக்கப்பட்ட இடத்துக்கு ஏற்பப் புதிய இயல்பு உண்டாகும்.

இடத்துக்கேற்றபடி இயல்பு அமைந்திருக்கிறது, என்ற பிரச்னையை, பல நாடுகள் சுற்றிவந்து, அந்தந்த நாட்டு மக்களுக்கு உள்ள பண்புகளைக் கண்டு, அவை வெவ்வேறாக இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, இந்த வேறுபாடுகளுக்கு என்ன காரணம் என்று கண்டறிய முற்பட்டபோது, விரிவான ஆராய்ச்சிக் குட்படுத்தினார்கள்.

நாட்டுப்பற்றுக்காரணமாக, இந்த ஆராய்ச்சியாளர்கள், எந்தக் காரணமாவது காட்டி, தங்கள் நாடு, தக்கதோர் இடமென்றும், எனவே, தமது இனத்தவரின் இயல்பு, மற்றவர்களின் இயல்பைவிடச் சிலாக்கியமானது என்றும் வலியுறுத்தினர். கிரேக்க நாடே, நல்ல இயல்புள்ள மக்களைக் கொண்டது என்று அரிஸ்டாடில் வாதிட்டது போலவே, கால்டுன் எனும் அராபிய ஆராய்ச்சியாளருக்கும் தன் நாட்டின் பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது.

அவர், உலகை, ஏழு இடங்களாகப் பிரித்துக் காட்டினார். ஏழு வித இயல்புகொண்ட இனங்கள் உள்ளன என்று கூறினார்.

வெப்பமிருந்த இடத்திலுள்ள மக்களுக்கு ஒருவகை இயல்பும், குளிர்ச்சிமிக்க இடத்திலுள்ள மக்களுக்கு வேறுவகையான இயல்பும் இருப்பதாகக் கூறினார். இதற்கு கால்டுன், சுருக்கமான விளக்கம் கூற, ஒன்று சொன்னார், "குளிர்ந்த இடத்திலே உள்ளமக்கள் திராட்சை ரசப்போதை அருந்தி மனக்கிளர்ச்சி பெறுவர்—ஆனால் அதேபோன்ற மனக்கிளர்ச்சி, அந்தப் போதைப் பானமின்றியே, வெப்பமுள்ள இடத்து மக்களுக்கு இயல்பாக அமைந்துவிடுகிறது" என்றார்.

அவர், உலகை 7 பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வோர் இடத்தின் தன்மையையும், விளக்கி, அதற்கேற்ப அந்தந்த இடத்து மக்களின் இயல்பும் அமைந்திருப்பதைக் கூறியபோது, அவருடைய தாய் நாடான அரேபியா, நல்ல இயல்புகளைத் தர இயலாத இடத்துக்கு அவர் குறிப்பிட்ட இலட்சணங்கள் கொண்டதாகக் காணப்பட்டது. அவருடைய ஆராய்ச்சியின்படியே, அரேபியா, சிலாக்கியமான நாடல்ல என்று முடிவுகூற வேண்டும். நாட்டுப்பற்று விடுமா! ஆராய்ச்சியாளர், ஒரு தாவு

தாவினர்!! கடுமையான வெப்பம் அரேபியாவில், மக்கள் பண்பை மாசுபடுத்தும் தன்மை இருந்தது, என்றபோதிலும் அரேபியாவை அடுத்து உள்ள கடலிலிருந்து கிளம்பும் காற்று, மிகமிக நன்மை தரக்கூடியது—அதன் பலனாக அரேபியாவிலே இயற்கையாக ஏற்பட்ட கேடுகளைக் களைந்துவிடவும், நல்ல இயல்புகளை மக்கள் கொள்ளவும் முடிந்தது, என்று வாதாடினர்.

இடத்துக்கேற்றபடி இயல்பு அமையும் என்ற ஆராய்ச்சி, வளர்ந்து வந்தது. மக்களின் நடைநொடிபாவனை, அரசுமுறை இவைகளுக்கெல்லாம் இந்த ஆராய்ச்சியின் துணைகொண்டு விளக்கம் தரப்பட்டது.

மொழிகள் வேறு வேறுவகையாக இருப்பதற்குக்கூட, இந்த ஆராய்ச்சியின்படியே விளக்கம் தரப்பட்டது.

அர்பத்நட் எனும் ஆராய்ச்சியாளர் குளிர் மிகுந்த நாடுகளிலே உள்ள மொழிகளில், மெய்யெழுத்து அதிகமாகக்கலந்திருக்கும் என்றும், வெப்பம் மிகுந்தநாடுகளிலே உள்ளமொழிகளில் உயிரெழுத்துக்கள் அதிகமாகக்கலந்திருக்குமென்றும் ஆராய்ந்து கூறினார். அவர் சொன்ன காரணம் இது:—

குளிர்மிகுந்த இடங்களிலே உள்ள மக்கள், அடிக்கடி வாய்திறந்து பேசுவதானால், குளிர் காற்று உள்ளுக்குச் செல்லும். இது அவர்களுக்கு நல்லதுமல்ல, விரும்பவும் முடியாது, சாத்யப்படவும் செய்யாது. உயிரெழுத்துகள் அதிகமாகக்கலந்தால், அடிக்கடி அவர்கள் வாய்திறந்தாகவேண்டும். அது முடிவதில்லை, இடத்தின் இயல்புப்படி. எனவே அவர்களின் மொழிகளில் அடிக்கடி அகன்று வாய்திறந்து உச்சரிக்கவேண்டிய அவசியத்தை உண்டாக்காத மெய்யெழுத்துகளே அதிகமாக உள்ளன.

அதுபோன்றே வெப்பம் அதிகமாக உள்ள நாடுகளில் வாயை அடிக்கடி அகலத்திறந்து காற்றை உட்கொள்வது விரும்பத்தக்கதாகவும், சுலபமானதாகவும் இருக்கிறது. உயிரெழுத்துகளை உச்சரித்தால் இது ஈடேறுகிறது — எனவே வெப்பமிகுந்த இடங்களில் உள்ள மொழிகளில் அதிகமாக உயிரெழுத்துக் கலந்திருக்கிறது.

இந்த ஆராய்ச்சியை மொழிநூல் ஆராய்ச்சியுடன் இணைத்துப் பார்க்க, மிகச் சுவைபயக்கும்.

பண்டைத் தமிழகத்திலே, இடத்துக்கேற்ற இயல்பு எனும் ஆராய்ச்சி மனப்போக்கு, உண்டு, என்று எண்ணி ஆச்சரியப்படத் தக்கவிதத்தில், நாடு பலவகை 'நிலங்கள்' ஆக, பிரித்துக் காட்டப் பட்டிருக்கிறது. தமிழக ஏடுகள் கூறும், 'திணை' இந்த இடத்துக்கேற்ற இயல்பு எனும் அரிய உண்மையை அடிப்படையாகக் கொண்டதுதான்.

தமிழர்கள், நிலத்தை ஐந்துவகையினதாகப் பிரித்துக்கூறி, இயல்பு விளக்கம் உரைத்துள்ளனர். முன்னாலே குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டியதைவிட, விரிவாக நிலத்தின் வளம், உயிர்வகை, ஆகியவற்றை விளக்கியுமுள்ளனர்.

ஆனால், மேனாட்டினருக்குக்கீதையின் மகிமையும் வேதத்தின் சிறப்பும், உபநிஷத்தின் உட்பொருளும் அறிவிக்கப் பட்டிருப்பது போல், தமிழர்கள், மிகமிகப் பழம்காலத்தில், நுண்ணறிவுடன் திணை ஆராய்ச்சி செய்துள்ளனர் என்ற உண்மை அறிவிக்கப் பட்டதில்லை. அறிவிக்கப்பட்டால், ஆராய்ச்சியாளர்கள் உண்மையிலேயே, ஆச்சரியப்படுவர்.

அவர்கள்மட்டுமென்ன! தமிழர்களிலேயே, பெரும்பாலோருக்கு ஆச்சரியமுண்டாகும். அவர்களுக்கும் "ஈரேழுபதினாலு" லோகங்களைப்பற்றிய கதைகள் அறிவிக்கப் பட்டுள்ள அளவுக்கு, தமிழர், தங்கள் நாட்டினை, எவ்வெவ்வகையில் பிரித்து, விளக்கினர் என்பது அறிவிக்கப் பட்டதில்லை. தமிழர் திருநாள் கொண்டாடிமகிழும் இந்நாள், சம்பாவுக்கும் கார் நெல்லுக்கும் பரம்படித்தலுக்கும், வரப்பு கட்டுவதற்கும் உள்ள வித்யாசம் கூடத் தெரிந்துகொள்ளாத தமிழர் மிகுந்துள்ள இந்நாள் நிலையில்—தமிழ் நிலம் ஐம்பெரும் பிரிவுகளாக அமைக்கப்பட்டிருந்த அரிய, பழைய, பட்டியல் அவர்கட்கு புதியவிருந்தாக அமையும் என்ற நோக்கத்துடன் அந்தப் பட்டியலை அடுத்த பக்கத்தில் பொறித்திருக்கிறோம்.

இவ்வளவு நுண்ணிய முறையிலே ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டிருந்த தமிழர்கள், அயல் இடத்தவரின் இயல்புகளைத் தமதெனக் கொள்ளாமல், மேலும் ஆராய்ச்சித் துறையிலே ஈடுபட்டிருந்தால், எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்க முடியும், என்பது பற்றிச் சிந்திக்க இது உதவி புரியட்டும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

ஒருநல்ல மனிதனும் சிறந்த அறிவாளியும் இவ்வுலகத்தின் போக்கைக்கண்டு பெரிதும் கோபங்கொள்வதுண்டு. சில சமயங்களில் வருத்தப்படுவதுமுண்டு. ஆனால் தன் கடமையைச் செய்யும் எவனும் அதனை வெறுப்பதில்லை.

சௌதி.

பர்மா ராணி!

இந்தப்புறாவும், மகத்தான தொண்டு புரிந்தது. போர்க்காலத்தில், எதிரிகளின் படைவரிசைகளைக் கடந்து, விண்ணில்பறந்து, 320 மைல்களை ஒன்பது மணிநேரத்தில் கடந்து சென்று தபாலைச் சேர்த்தது, "பர்மாராணி" என்ற பெயருள்ள இந்தப்புறா.



ஐம்பெரும் பிரிவுகளின் பட்டியல்.

—❀—

நிலம்	1 முல்லை	2 குறிஞ்சி	3 மருதம்	4 நெய்தல்	5 பாலை
நில விளக்கம்	காடும், காட்டைச் சார்ந்த நிலங்களும்	மலையும், மலையைச் சார்ந்த நிலங்களும்	நாடும், நாட்டைச் சார்ந்த நிலங்களும்	கடலும், கடலைச் சார்ந்த நிலங்களும்	முல்லையும், குறிஞ்சியும் காய்ந்து தீய்ந்து மாறுதலடைந்த—நிலங்கள்
மக்கள்	ஆயர் ஆய்ச்சியர்	குறவர் குறத்தியர்	உழவர் உழத்தியர்	பரதவர் பரத்தியர்	எயினர் எயற்றினர்
உணவு	வரகு சாமை	நெல் தினை	நெல்	மீனுக்கும் உப்புக்கும் கிடைப்பது	வழிப்பறித்தலில் கிடைத்தவை
விலங்கு	முயல் மான்	புலி யானை	எருது	சுறா முதலை	செந்நாய்
மரம்	கொன்றை குருந்து	அகில் தேக்கு	வஞ்சி மருதம்	புன்னை ஞாழல்	இலுப்பை ஓமை
பறவை	மயில் கானங்கோழி	கிளி மயில்	நீர்க்கோழி தாரா	அன்னம் அன்றில்	கழுகு புறா
பறை	ஏறுகோட் பறை	வெறியாட்டுப் பறை	மணமுழவு	மீன்கோட் பறை	ஊரெறிப் பறை
தொழில்	வரகு விளைத்தல், நிரை மேய்த்தல்	தேன் அழித்தல், கிழங்கெடுத்தல்	நெல் விளைத்தல், கடா விடுதல்	மீன், உப்பு பண்டமாற்று விற்றல்	நிரை கோடல், சூறையாடல்
யாழ்	முல்லை யாழ்	குறிஞ்சி யாழ்	மருத யாழ்	வளர் யாழ்	பஞ்சுரம்
தலைவன்	குரும்பொறை நாடன்	சிலம்பன்	மகிழ்ஞன்	துறைவன்	காளை
தலைவி	கிழத்தி	கொடிச்சி	மனைவி	பரத்தி	பேதை
பூ	முல்லைப்பூ	குறிஞ்சிப்பூ	தாமரைப்பூ	நெய்தற்பூ	மராப்பூ
நீர்	கான்யாறு	அருவி சுனை	யாறு மனைக்கிணறு	மணற் கிணறு உவர்க்கழி	வறுநீர்க் கடலும் அறுநீர்ச் சுனையும்
ஊர்	பாடி, சேரி	குடி, குறிச்சி	பேரூர்	பட்டினம் பாக்கம்	கோல், குறும்பு

விடுதலை விழா

"பர்மா, பிடிபட்டுவிட்டது. போரிலே நமக்கே வெற்றி. மன்னர் தீபாவைச்சிறைபிடித்துவிட்டோம். இந்தியாவில் ரத்னகிரி கோட்டையில் காவலில் வைத்திருக்கிறோம். அவருடைய சிங்காதனத்தையும், பர்மாவிலிருந்து கொண்டுவந்துவிட்டோம்! இனிப்பர்மா, நமது ஆளுகையில் இருக்கும்."

வைசிராய்

டப்ரின்

"பர்மா, சுதந்திரநாடாகிவிட்டது. பர்மிய சர்க்காரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டது. தீபா மன்னர் காலத்தில், நாம் பர்மாவிலிருந்து எடுத்துவந்த சிங்காதனத்தை, பர்மிய சர்க்காருக்குத் தருவதற்கு, நான் விரைவில் பர்மா செல்ல இருக்கிறேன். இனி, பர்மா பர்மியருக்கு!"

வைசிராய்

மவுன்ட்பேடன்.

* * *

இந்த இரண்டு கடிதங்களுக்கும் இடையே, எவ்வளவு மாறுதல்! எவ்வளவு இரத்தம்!!

முதற்கடிதம், முறுக்கேறியஏகாதிபத்யத்தின், முழக்கம்!

இரண்டாம் கடிதம், கலைக்கப்பட்டுவரும் ஏகாதிபத்யத்தின், "கொஞ்சு மொழி!"

வெற்றியால் விளைந்த செருக்கு முதற் கடிதத்தில்!

இனி, நமது ஏகாதிபத்ய வேலைக்கு இடமில்லை—எனவே யூகத்துடன் நடந்துகொள்வதே நல்லது என்ற தந்திரம், தொனிக்கிறது, இரண்டாம் கடிதத்தில்!

இந்த இரண்டு கடிதங்களுக்குமிடையே, அறுபது ஆண்டு உரிமைப் போரும், அதன் சம்பவங்களும், நிறைந்துள்ளன.

பிடிபட்ட பர்மா—விடுபட்ட பர்மா—இருகடிதங்களின் இரகசியப் பொருள், இதுவே.

தீபாமன்னர் இல்லை! மன்னரே, இனி இல்லை! மக்களாட்சி மலருகிறது பர்மாவில்.

எனவே, மவுன்ட்பேடன் பிரபு, எடுத்துச் சென்று தரப்போகும், சிங்காதனத்திலே, இனி எந்த மன்னரும் அமரப்போவதில்லை—ஆனால் விடுதலைபெற்ற பர்மாவிலே, மக்களாட்சித் தலைவரின் மன்றத்திலே, அந்த ஆசனம், இருக்கக் கூடும்.

அந்தச் சிங்காதனந்தான், பர்மாவின் கடைசி சிங்காதனம். தீபா மன்னரோடு, மன்னராட்சி முறையும் போய் விட்டது.

அன்னிய ஏகாதிபத்யத்தால். சிறை வைக்கப்பட்டிருந்த சிங்காதனத்துக்கும் விடுதலை, இனி.

* * *

சிங்காதனமும், பர்மா செல்லப் போகிறது! பர்மாவும் விடுதலைபெற்ற தனியரசாகி மிளிர்கிறது.

பர்மாவை, பிரிட்டிஷார், கைப்பற்ற மூன்றுமுறை போர்நடத்தினர். முதல் பர்மிய யுத்தத்தின் போது, மாவீரன் மகாபண்டுலோ என்ற பர்மியப்படைத்தலைவனின் திறமை, ஆங்கிலரைத் திணற வைத்தது. போர்நடை பெறுகையிலே தற்செயலாகக் குண்டு பாய்ந்து படைத்தலைவன் இறந்துவிடவே, படை சிதறிவிட்டது, பர்மியர் தோற்றனர்.

மூன்றாவது பர்மிய யுத்தத்தின் போது தீபா என்பவர், மன்னராக இருந்தார்.

போர் விரைவிலே முடிந்து விட்டது. தீபாமன்னரைக் கைதுசெய்து இந்தியாவிற்குக் கொண்டுவந்து, ரத்னகிரி கோட்டையில் காவலில் வைத்தனர். அவருடைய சிங்காதனத்தையும் தூக்கிக்கொண்டு வந்துவிட்டனர். பர்மிய மன்னர் இந்தக் கோட்டையிலேயே காலமானார்.

மூன்றும் பர்மிய யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தியவர், டப்ரின்பிரபு எனும்வைசிராய்.

இவர் காலத்திலேதான், பர்மா தனிநாடு என்ற நிலை அழிக்கப்பட்டு, இந்தியாவிலே, ஒரு மாகாணமாக்கப்பட்டது.

மன்னர் சிறைப்பட்டு, நாடு தன்னாட்சி இழந்து, இந்தியாவுடன் இணைக்கப்பட்ட போதிலும், பர்மிய தீரர்கள், ஆங்கிலரின் ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்தனர்.

சிலநாட்களிலே, மூன்றாவது பர்மாயுத்தம் முடிவுற்று, மன்னர் சிறைபட்டார், ஆனால் மக்களை அடக்க, ஆண்டுகள் பல பிடித்தன. மன்னராட்சியின்போது தேவைப்பட்டதை விடப் பெரும்படை, மக்களின் கிளர்ச்சியை அடக்கத் தேவைப்பட்டது.

1922ம் ஆண்டுதான், பர்மாவுக்கு, ஒரு நிலையான நிர்வாகம் அமைத்து, மாகாண அந்தஸ்தும், கவர்னரும் ஏற்படுத்த முடிந்தது.

மன்னருக்கு நேரிட்ட இழிநிலை, தன்னாட்சி அழிவு, ஆங்கில ஆதிக்கம், இந்தியாவுடன் இணைப்பு, ஆகியவைகள் பர்மியர் மனதிலே, மிகுந்த வேதனையை உண்டாக்கிற்று.

ஒருகாலம் இருந்தது, அசாமும், மணிபூர் சமஸ்தானமும், பர்மாவுடன் இணைந்திருந்த காலம். வங்காளத்தை ஆளமுடியும் என்று திட்டம் போட்ட பர்மிய மன்னர்களின் காலம் போய், பர்மா, இந்தியாவின் ஒரு அங்கமாகிவிட்ட நிலைபிறந்தது. இதனால், பர்மியர்,உள்ளக் கொதிப்பு வளர்ந்தே வந்தது.

பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே, புத்தமார்க்கத்தின் பலனாக கலாச்சாரத் தொடர்பு இருந்ததேயொழிய, மக்களின் பழக்க வழக்கம், வாழ்க்கை முறை ஆகியவற்றிலே, ஒருவிதத் தொடர்பும் இல்லை. பெருங்காடுகள், காட்டாறுகள், குன்றுகள், மலைகள், போன்ற இயற்கைத் தடைகள், இந்தியாவுக்கும் பர்மாவுக்கும், நில மார்க்கத் தொடர்பு ஏற்பட முடியாதபடி செய்தன.

பலகாலமாகத், தனிநாட்டு அந்தஸ்துப் பெற்றிருந்த பர்மியருக்கு, இந்தியாவுடன் இணைந்திருப்பது, பிடிக்கவில்லை.

இந்தியா—பர்மா—இரண்டும் பிரிட்டனிடம் சிக்கி இருந்தன என்றபோதிலும், இந்தியாவுக்குச் சட்டாம்பிள்ளை நிலை இருந்தது, பர்மா இதை விரும்பவில்லை.

முற்றிலும் வேறுபட்ட இரு இடங்களை ஒன்றாக இணைத்த பிரிட்டிஷார், இரு இடத்தவரும் ஒன்று சேர்ந்து, தங்கள் உரிமைகளைக் கேட்கும் நிலைபெறமாட்டார்கள் என்று எண்ணியே, தந்திரமாக,

திராவிட நாடு

காஞ்சி] 13—1—48 [ஞாயிறு

பொங்குக இன்பம்!

✲

'பொங்கல் புதுநாள் இன்று' தமிழர் திருநாள்! இந்நாள், நாம் நமது வாசகர்கட்கும் அவர்தம் நண்பர் குழாத்துக்கும்—பொதுவாகவே திராவிடர் அனைவருக்கும் பொங்குக இன்பம்! தங்குக எங்கும்! வாழ்வு வளமாகுக! வேளாண்மை ஓங்குக! இடர் ஒழிக! இல்லாமை ஒழிக! அனைவரும் சமமெனும் நீதி செழித்தோங்குக! இன்பம் பெருக!—என்ற அன்புரைகளைப், பொங்கும் மகிழ்ச்சியில் பெய்து தருகிறோம். மனைதோறும் மகிழ்ச்சி மலர வேண்டுமென்று விரும்புகிறோம். அளவரிசிக் காலந்தான், ஆள வந்தார்களுக்குக் கவலைதான், என்றாலும் ஆண்டிற்கோர்நாள், இத்திருநாள்—இந்நாள், மகிழ்ச்சி மலரட்டும்—மாண்பு சிறக்கட்டும். ஆரியகலாச்சார முறைப்படி அமைந்த ஆபாசப் பண்டிகை அல்ல இது. சூதும் சூழ்ச்சியும், வீரதனை வாட்டிவதைத்ததை விளக்கும் பண்டிகையல்ல. இது, தமிழர் திருநாள். பாடு பட்டால் பலன் உண்டு, உழைத்தால் வாழ்வுண்டு, என்ற மூலக்கொள்கைக்கு இடமளிக்கும் நாள். காட்டைத் திருத்தி நிலமாக்கி—உழைப்பால், ஓமத்தால் அல்ல—மேட்டை அகற்றிக் குளமாக்கி—நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்ததால், நெய்யை ஊற்றித் தீயை மூட்டினதால் அல்ல—காடுகளை வாய்க்கால்களாக்கி, வயல்கள் அமைத்து, வரம்பிட்டுத் தொகுத்து, உழுது, நீர் பாய்ச்சி, களை எடுத்துக் காப்பாற்றி, முற்றிய கதிரை அறுத்தெடுத்து முற்றத்தில் கொட்டி, அளந்து பார்த்து ஆனந்திக்கும் நாள். உழைப்பின் பயன் இதுவென உணர்ந்து மகிழ்ந்து பொங்கும் மகிழ்ச்சியை எடுத்துக் கூறுவதுபோல, பொங்கலோ! பொங்கல்! என்று தீந்தமிழ் புகன்று, இத்திக்கும் பண்டமுண்டு, திருநாள் கொண்டாடுகின்றனர்.

திருந்தா வயலில் உழவு இல்லை—நம் நாடு திருந்தாத வயலாகவே இன்றும் இருக்கிறது. உழுது நீர் பாய்ச்சி, களை எடுக்கா முன்னம் பச்சைப்பயிர் பார்க்க முடியுமா? செந்நெல் தேட இயலுமா? நாம், எங்கே, நம்நாட்டுக் களைகளைப் போக்கினோம்!! இல்லையே! அதோ தீண்டாமை—கள்ளி. இதோ வைதிகக் காளான்! அங்கே சனாதன சேறு! அதிலே நெளிகிறது பழமைப் புழு! மாயா வாத மடுவிலே, வேதாந்த முதலைகள்!! நாடு இந்த நிலையிலே இருக்கிற காரணத்தால், நாம் கொண்டாடும் திருநாள், முழு விழாக் கோலத்துடன் இல்லை! புன்னகையும் பெருமூச்சும் மாறி மாறித் தோன்றும் நிலைதான்!

"அண்ணா! வா! செங்கரும்பின் சாறு, பருகு!"—என்று அழைக்கிறோம் இல்லங்களில். அதோ சேல்விழியாள் பால்வண்ணப்பட்டுடுத்தி, பவழநிற அதரத்தைப் பக்குவமாகத் திறந்து, பளிங்குப் பற்களைக் கொஞ்சம் காட்டி, "பால் பொங்கிற்று!"—என்று கேட்டுவிட்டுச் செல்கிறாள்.

குழந்தைகுமரன், அதட்டிப்பார்க்கும் அன்னையைக் கன்னல் மொழிக் குழைவால் ஏய்த்துவிட்டு, விளையாட்டு நடை நடந்துகாட்டி, கண் மூடித் திறப்பதற்குள், வாழையைக் குழைத்து வாயிலும்கையிலும் பூசிக் கொள்ள, வாயலில், பலாவின் சுளையைப் பக்குவமாகப் பெயர்த்துக் கொண்டுள்ள தந்தையிடம், கொண்டு போய் நிறுத்தி, "பாருங்கள், உமது மகனின் சேஷ்டையை" என்று கூறிக் களிக்கும் தாய்மார்கள் உலவுகிறார்கள். புத்தாடை பூண்டு, புதுச்சுவைப் பொருள் சமைத்து உண்டு, உள்ளத்தில், ஓர் நாளேனும் களிப்புக் கொள்வோம் என்று, மனைதோறும் உள்ளனர். மக்களோடு, மாடு கன்றும், விழாக் கோலம் பூண்டு கொண்டன!

அம்மையை ஐயன் மணம் செய்து கொண்ட நாளல்ல, ஆவுக்கு மோட்சம் அளித்த நாளல்ல, சூரனைக் கொன்ற விழாவல்ல, தாளில் வீழ்ந்து தட்சணை தரவேண்டிய நாளல்ல—தமிழரின் தனித்திருநாள் இது—தவறிய பாதையில் புகுந்த தமிழர் வழக்கமாகக் கொண்டாடும், பல ரகப் பண்டிகைகள் போன்றதல்ல.

பொங்கற் புதுநாள், தமிழரின் தனிப் பெருந் திருநாள்—அன்று தமிழர், விழாக்கொண்டாடுவதுமட்டுமல்ல, விருந்துண்டு மகிழ்வது மட்டுமல்ல, தமிழகத்தின் நிலைமை பற்றியும், கூடிப்பேசி, மகிழ்ச்சியும் எழுச்சியும் கொள்ளவேண்டிய நாள், என்பதைச் சில பல ஆண்டுகளாகத் தமிழர்கள் உணர்ந்து, அதற்காவன செய்து வருகிறார்கள். சென்னை நகரில், பொங்கற் புதுநாளைத் தமிழர் திருநாளாக்கத் திருத்தி அமைத்த பெருமை காலஞ் சென்ற தமிழ்வேள் கா. நமசிவாய முதலியாரைச் சாரும். தமிழ்ப்பெரும்புலவர் துவக்கிய அந்தப்பணி, அரும்பென இருந்தபோது, தமிழ்நாட்டிலே தோன்றிற்று, மொழிப் போர்ப்புயல்—இந்தி எதிர்ப்புப்போர். ஆட்சியாளரின் மமதையை வீழ்த்தியபுயல், அரும்பை மலரச்செய்யும், அரும் பணியுமாற்றிற்று. எந்தச் சுயமரியாதைக்காரர்கள், கலை அறியாதார்—மொழி அறியாதார்—என்று ஏளனம் செய்யப்பட்டனரோ, அவர்தம் பெருமுயற்சியாலே, தமிழகத்திலே, தமிழ்த்திருநாள், உயர்ந்த இடம் பெற்றது—மதுரை கயற்கண்ணியார் கோயிலிலே, நிதியின் காவலர்கூடி, ஆரியம் வருமுன்னர் சீரிய திராவிடம் வீறுடன் விளங்கிற்று என்று பேசும் தமிழ்த்திருநாள் நடைபெறும் அளவுக்கு வளர்ச்சி ஏற்படக்கண்டோம்—களித்தோம்.

விழாவில் மகிழ்ந்து, பின்னர் அயர்ந்து போவதை நாம் விரும்பவில்லை. விழாவே, சிந்தனைக்கு ஓர் விருந்தாக அமையவேண்டும் என்று எண்ணுகிறோம். அந்த முறையிலேயே, தமிழர் இல்லந்தோறும், பொங்கற் புதுநாள் விளங்கவேண்டும் என்பதற்காக, கரும்பும் வேம்பும், கதலியும் மலரும், செந்நெலும் பிறவும் தருவதற்குப்பதில், சிந்தனைக்குரிய சிலபல கூறுவதையே பொங்கல் விழாவுக்கு நாம் தரும் பொருள் என்று கூறுகிறோம்.

விழாவுக்கு உதவியவர் உழவர்; அவர்தம் நிலையை மறத்தலாகாது. உழவர் உள்ளம் எந்நிலையோ, அந்நிலையே வார்நிலை இருக்கும்—வாரான்வோரின் நிலையிருக்கும். உழவுத் தொழிலுக்கு, நாட்டுமக்கள் நன்மதிப்புத்தருவதே, இந்தத்திருநாளின் முக்கியமான நோக்கமாக அமைதல் வேண்டும். வேலி இரண்டாயிரம் கொண்ட நில வேந்தர்கள் ஓர்புறமும், ஒட்டிய வயிறுடன் கட்டிய கந்தையைக் கசக்கிப் போட்டுவிட்டு, கையால் மெய்யைப் போர்த்துக் கொண்டுள்ள உழவர் மற்றோர் புறமும் இருப்பது, நாட்டுக்குநல்லதல்ல.

இந்தக்காட்டுமுறை போகவேண்டும்—போய்த்தீரும்—போகும் என்ற நம்பிக்கை ஏற்படும் வகையிலே, ஜெமீன், இனும், ஒழிப்புத்திட்டங்கள் உருவாகின்றன. ஆனால் அது மட்டும் போதாது, காட்டுராஜாக்களோடு, மேட்டுக் குடியினரின் மேலாதிக்கமும் தொலைந்து, கூட்டுப்பண்ணை முறை ஏற்படவேண்டும். உழவனின் உரிமைகளை ஊராள்வோர்பாதுகாத்துத் தரவேண்டும். உழவனின் வாழ்வையே வளைக்குமளவு இன்றுள்ள உழைப்புக்குறையும்படியும், அதேபோது, விளைவு அதிகரிக்கும்படியும், விஞ்ஞான வசதிகள் கிடைக்கச்செய்ய வேண்டும். எலும்பொடியப் பாடுபட்டுச் சாதிக்கவேண்டிய காரியங்களை, 'இரும்புச்சேவகன்' இன்று செய்து தருகிறான், மேனாடுகளில். அங்கிலே, இங்கும் வரவேண்டும். வெள்ளி முளைத்ததும், கோழி அரைத்தூக்கத்துடன் கூவத் தொடங்கியதும், காகம், கம்மியகுரலில் கரையத்தொடங்கியதும், கலப்பையைஎடுத்துக்கொண்டு காளையை ஓட்டிக்கொண்டு, சென்று, கடும்வெயிலில், கஞ்சிக்கலயத்தைச் சுமந்துகொண்டு மனைவிவரும் வரையில் நிலத்தில் உழுது, பிறகு, செவ்வானம்கண்டு வீடு திரும்புகிறான் உழவன். ஆனால் அவன்வாழ்வு செம்மைப்படக் காணோம். உழுது, விதை தூவி, நீர்பாய்ச்சி, மடைகட்டி, களை எடுத்து, அறுத்து, அடித்துக் குவிக்கிறான்; ஆனால் அவனுடைய குடும்பம் களிப்படைவதில்லை. விவசாயத்தையே பெரிதும் நம்பிவாழ்கிறது நம்நாடு. ஏரெழுபது பாடினர் கவிகள். இன்றும் கவிகள், கிராமாந்திரத்தில் உள்ள சோலைகள், சாலைகள், வாவிகள், வர்ணனைகளைப் பற்றிக் கூறுகின்றனர். ஆனால் கவியின்கண்களுக்குத் தென்படும் சித்திரத்துக்கும், நமது கண்களில் தெரியும் சித்திரத்துக்கும் பெருத்த மாறுபாடு இருக்கிறது. நாம்காண்பது வறண்ட நிலம், வற்றியகுளம், நீரில்லா ஆறு, முடை நாற்றமடிக்க, முண்டும்இன்றி ஆடும் பாலர்கள், எலும்புக்கூடான எருதுகள், இளைத்தஉழவன், இருமல்நோயால் வாடும் அவன் மனைவி, தடியூன்றித் தவிக்கும்தாய், தாங்கொணாவறுமை, பஞ்சம், பிணி, பட்டினி, பரதவிப்பு, சோகம்!

இந்த நிலை மாறியாகவேண்டும்—நீதி செழிக்க வேண்டுமானால், நிம்மதி ஏற்படவேண்டுமானால், மனிதத்தன்மை மலரவேண்டுமானால், உழவன் வாழும் கிராமத்துக்கும் உல்லாச வாழ்வினர் வசிக்கும் நகரத்துக்கும், இடையே இன்று காணப்படும் பேதம்—வசதிக்குறைவு—நீக்கப்படவேண்டும். ஏரடிக்கும் சிறுகோலின் மகிமையைப் பாடிக்காட்டிவிட்டு, "சேரிக்குப்போடா! நாளைக்கு வாடா!" என்றும் பாடிக்காலந்தள்ளலாகாது-முடியாது. நாட்டின்பொதுச் செல்வம் வளர, பொதுத்தரம் உயர, பொது நன்மை ஓங்க, உழவனின் தொழில்முறையிலே, அவர் வாழும் கிராமவாழ்க்கை முறையிலே, மிக மிக முற்போக்கான மாறுதல் ஏற்பட்டாக வேண்டும். புரட்சிக்குப் பிறகு, சோவியத்நாட்டிலே, தலைவர்கள்; இனி நாம்ஓர் துணை தேடியாக வேண்டும்-புரட்சிபலன்தருவதற்குப் புதுமுறை நிலைப்பதற்கு என்று கூறினர்—யாது இந்தத் துணை என்று கேட்டதற்கு, ஒரே வார்த்தையில் பதில் கூறினர். மின்சாரம்!—என்று. விளக்குமட்டுமல்ல; மனிதனின் உழைப்பைக்குறைக்கும், சகல சாதனமும், வசதியும், இதன்மூலம்பெற வேண்டும்.

உழவரின் நிலையைக்குறித்து விழாநாளன்று எண்ணுவதுபோலவே, ஊர் நிலை பற்றியும், நமது உள்ளத்தின் நிலை பற்றியும் எண்ணுவதும், அந்த எண்ணத்தை நமக்களித்த தலைவர் பெரியாரின் பெருந்தொண்டினைப்போற்றுவதும், விழாநாள் நிகழ்ச்சிகளாக வேண்டும்.

நாடு, தன்னாட்சி பெற்று, விளங்க வேண்டும், புத்துலகப் போக்குக் கொள்ளவேண்டும் என்பது, நமது குறிக்கோள். திராவிடம் தனிஅரசு செலுத்துவதற்கு ஏற்றதிறம், வசதி, வாய்ப்புப் பெற்றிருக்கிறது என்பது நமது நம்பிக்கை. நம்பிக்கை, ஆதாரங்களின் அடிப்படைமீது எழுப்பப்பட்டது — மனக் கோட்டையல்ல. மாசுபடிந்த மணி, நம்நாடு, என்பதற்கு மறுக்கமுடியாத ஆதாரங்கள் உள்ளன. மக்களின் ஒன்றுபட்ட உள்ளம் ஒன்றுதவிர, பிறவளங்கள் யாவும் பெற்றுள்ளநாடு — திராவிடநாடு.

"வளமார் எமது திராவிடநாடு
வாழ்க! வாழ்கவே!!"

என்ற பண், விழாக்கொண்டாடும் மனைதோறும், கேட்கப்படவேண்டும்.

திராவிடத்தின் விடுதலைப்போரை நடத்தும் பெரும் பொறுப்பு நமது நாட்களில் ஏற்பட்டிருக்கிறது. அதன் அவசியத்தை மக்கள் உணரச் செய்யும் பெரும்பணியில், பகுதியளவும் இன்னும் நடைபெறவில்லை. அந்தப் பணி, தொடர்ந்து நடைபெற, உதவும்நோக்கத்தைவிழாவன்றுகொள்ள வேண்டுகிறோம்.

தன்னாட்சியைத்திராவிடம்இழந்ததோடுமட்டுமில்லை.

அதோ ஓர் அருவி! இதோபார் அகிற்கட்டைகள்! இதோபார்சந்தனமரக்கட்டை! இதோ மூங்கில்! இவற்றை எல்லாம் அந்தமலை யருவி உருட்டிக்கொண்டுவருகிறது பாராய்—என்று ஒருகாலத்தில் பேசிக்களித்த மக்கள் வாழ்ந்த நாட்டிலே, குன்றின் எழிலையும், கோலமயிலாடும் காட்சியினையும், வென்று வாகை சூடிய வீரரையும், அவரை வேழம் துரத்திடுக! என்றழைத்து, புன்னகை விருந்திட்ட பூவையரையும், முத்துக்குவியலையும், கண்டு பெருமை அடைந்தவர்கள் வாழ்ந்த நாட்டிலே, இன்று அணையில்லா ஆறுகள், வகையில்லா விவசாயம், பாதையற்ற கிராமங்கள், பயன்தராப் படிப்புமுறை, பக்குவமற்ற ஆட்சித்திட்டங்கள் உள்ளன. இவற்றோடு, மச்சகூர்மமுகங் கொண்டோர், மார்கழியில் வெண்பொங்கல் தின்றோர், மார்பில் மங்கை கொண்டோர், மாசூரர் பலரைக்கொன்றோர், பூசுரர் வேண்டிட அருளை விண்டோர் என்று இவ்விதமாகவெல்லாம், ஆண்டவனைப்பற்றி அர்த்தமற்ற கதைகளை நம்பிக்கொண்டு, அவல வாழ்வு நடாத்தும் மக்கள், உடலை நடமாடவைக்க உயிரும், உயிர் தங்கி இருக்க உடலும் கொண்ட உருவங்களாக உள்ள நிலையைக்காண்கிறோம்.

இந்த நிலையின் காரணத்தையும் கண்டறிய மறந்திருந்தோம் — நெடுநாள் வரை. கண்டறிந்ததுமோ, கவலைக்குள்ளானோம், இழந்த அந்த இன்பத்தை மீண்டும் பெறுவது எப்படி என்று. எவ்வளவோ கவலை, கலக்கம், பயம், தோல்வி, சஞ்சலம், இவைகளைக் கடந்துதான், அதோ மனையில் உள்ள விளைபொருள்கள், ஆடை, அணி, கிடைத்தன—பாட்டாளிகளின் தயவால்.

இழந்த இன்பத்தை மீண்டும் பெறமுடியாது என்று எண்ணுபவர், தமது ஏமாளித்தனத்தை ஏதோ ஒரு பெயரிட்டழைத்துத் திருப்திப்படட்டும். நாம், அங்ஙனம் கருதத் தேவையில்லை. எங்கும் விடுதலை

விழா நடந்தேறும் நாட்களிலே வாழ்கிறோம். ஏகாதிபத்யம் கடனுளியானதைக் காண்கிறோம். விடுபட்ட பர்மா, சீர்பட்ட சிலோன், இரவல் கௌரவத்தைப் பெற மறுக்கும் இந்தோனேஷியா, என்று, எத்திக்கு நோக்கினும், தளைகள் அறுபடக் காண்கிறோம்! வீழ்ச்சியுற்ற தமிழகமும் எழுச்சி பெற்றே தீரும், என்ற உறுதி ஏற்படத்தான் செய்யும். ஏன் இயலாது! புதிய பொலிவு பெற்றே தீருவோம், என்று புத்தாண்டு விழா நாளன்று, குடும்பத்திலே குதூகலம் மிகுந்து, விளங்கும் இந்நாள், சூளுரைத்துப் பணிபுரிந்தால், தேய்ந்து கிடக்கும் திராவிடத்திலே, மீண்டும் வெற்றி ஒளி எழுந்திடும். அதோ உள்ள நெல் — மண்ணிலிருந்து கிடைத்தது! கருமையும் செம்மையும் கலந்த மண்ணிலே இருந்து மனிதனின் உழைப்பும் உறுதியும், பொன்னிற மணிகளைப் பெறச்செய்தது! உழைப்பின் வெற்றி! உறுதியுடன் பணிபுரிய ஓர் இனம் துணிந்து விடுமானால், பார்வையால் உருட்டி, பேச்சால் மிரட்டி, நடவடிக்கைகள் மூலம் ஜனநாயகத்தையே மாய்க்கும் போக்குக் கொண்ட பட்டேல்களும், பணிந்தே தீருவர். இப்போதும் என்ன? அகதிகளைக்காட்டி, ஐயோ! படுகொலை! என்று ஓலத்தைக் கிளப்பி, காஷ்மீரில் சண்டை, பாகிஸ்தானுடன் பலவித தகராறு, நிஜாமின் கெடுபிடி, என்ற மிரட்டும் குண்டுகளை வீசியே, படேலிசம், வாழ முடிகிறது. பயமூட்டிவிட்ட நிலையிலே மட்டுமே படேலிசம் வளர முடியும்.

கடந்த போரின்போது, ஜெர்மானியர் ஒருபுதுரக வெடிகுண்டு வீசினர்—அது ஆளைக் கொல்லாது, இடத்தை அழிக்காது, ஆனால், மக்களின் மனதை மருட்டும், ஓர் அகோரக் கூச்சலைக் கிளப்பி, கதறல் குண்டு என்று பொருள்படக் கூடிய, SCREACHING BOMB என்று பெயர். இன்று, படேலிசம், இதே முறையில், அறிக்கைகளை, சொற்பொழிவுகளைப் பயன்படுத்தி, மக்கள் மனதிலே மருட்சியை ஊட்டி, அவர்களைச் சிந்தனையற்றவர்களாக்க முயலுகிறது. இது, நிரந்தர வெற்றிதரும் முறையல்ல! இந்தக் குழப்பமூட்டும்சூழ்நிலைமாறிவிடும்—மாறினதும், திராவிடத்திலே, தெளிவு ஏற்படத்தான் செய்யும். அமைச்சர்கள், அடிக்கடி தாம் வடக்கே அனுப்பி, உதாசீனப்படுத்தப்பட்ட அறிக்கைக் கட்டுகளின் மீது கண்ணீர் சொரிவர்! வரிபோடுமுறையும் வற்றிவிட்டது. மத்யசர்க்காரிடமிருந்தோ, போதுமான உதவி கிடைக்கவில்லை என்று நிதி மந்திரி, நாட்டின் கதிபற்றிக் கவலையுடன் பேசுவார். கள்ள மார்க்கட்டும் ஒழிந்தது, கட்டிய மனக்கோட்டையும் இடிந்தது, வடநாட்டவருக்குக் கமிஷன் ஏஜண்டுகளாக இருக்கும் நிலை தவிர, வேறுகாணோமே, என்று, இந்நாட்டுத் தொழில் துறையினர், வணிகத் துறையினர், துயருறுவர். எதற்கெடுத்தாலும் டில்லிதானா! என்று மன எரிச்சலுடன் கேட்பர், நிர்வாகத்திலிருப்போர். "ஏமண்டோய்! மன அந்தமைன ஆந்திர தேசமுகூட, வாள்லகே சொந்தமைனதோ—ஈ, குஜராத்தி வாள்ளு, சாலா தொந்தரவு சேஸ்தாரண்டி"- என்று ஆந்திரத்தலைவர்கள் பேசுவர். வெற்றிக் கொடியை வேங்கடத்தின் மீது நாட்டிவிட்டோம், வேறுவேலை வேண்டுமே, என்பர் தமிழரசார்! இங்ஙனம், அனைவரும் கூடி, ஒவ்வோர் துறையிலே கிளம்பும் அல்லல் பற்றியும், பேசுவர் —, பேசிக் கொண்டே, அவர்களையும் அறியாமல், திராவிடநாடு திராவிடருக்கே, என்ற சிந்துபாடத் தொடங்குவர். முன்கூட்டி நாம் கூறும்போது மட்டும், முகத்தைச் சுளித்துக்கொள்வர், முட்டாள்தனம் என்பர், அவர்களின் அகராதி பெரிது! ஆனால், நமது நம்பிக்கைக்குக் காரணம் என்ன?

1. எலிவளை எலிகளுக்கே என்று பேசினவர்கள் தமிழ் நாடு தமிழருக்கே என்று பாடுவது காண்கிறோம்.

2. இந்தியைக் கட்டாய பாடமாக்குவதே சரி என்றவர்கள், என்ன பாடுபட்டாலும், இந்தி பொது மொழியாவது சிரமம் என்று சோக ரசத்துடன் பேசக் கேட்கிறோம்.

3, மத்ய சர்க்கார் தேவைதான் என்றாலும், மாகாணங்களை இப்படிப் பட்டினி போடும் முறையிலே, சகல அதிகாரமும், டில்லியில் குவிவது கூடாது என்று பேசிடக் கேட்கிறோம்.

இவைகள், மங்கல நிறமான, குறிகள்! ஆனால் மறைந்துவிடக் கூடிய குறிகளல்ல—வளரக் கூடியவை.

அசாமியரே! வங்காளிகளைவெறுக்காதீர்.

வங்காளிகளே குஜராத்தியரைக் குறை கூறாதீர்.

பீகாரிகளே! வங்காளிகளை விரட்டாதீர்!

ஆதிவாசிகளே! பீகாரிகளுக்குத் தொல்லை தராதீர்.

குஜராத்திகளே! மராட்டியரை மரியாதைக் குறைவாகப் பேசாதீர்.

மராட்டியரே! குஜராத்திகள் மீது கோபம் கொள்ளாதீர்.

மார்வாரிகளே! பணமூட்டை கட்டும் தொழிலைக் குறையுங்கள்.

இவை, காந்தியாரின் பிரார்த்தனைப் பகுதிகள்!

என்ன பொருள்? அவர் சமரசவாதி, ஞானப்பிரகாசர், தன்னுயிர் போல் மன்னுயிரை நேசிப்பவர் என்றெல்லாம் கூறத் தோன்றும் காந்தீயர்களுக்கு. இந்த அர்ச்சனையிலே நாம் குறுக்கிடவில்லை. ஆனால் இது மட்டுமா, பொருள்? இந்தஉபதேசம் தேவைப்படுகிற அளவுக்கு, மாகாணத்துக்கு மாகாணம், மனமாச்சரியம் முற்றுகிறது. இந்து—முஸ்லீம் கலவரம், என்ற ஒரே ஒரு பாசக் கயிறுதான், இவைகளைக்கட்டிவைத்திருக்கிறது—வேறு இயற்கைப் பாசம் இல்லை.

இந்நிலையில், இழந்த இன்பத்தை, நாம் பெறுவதா முடியாத காரியம்!

கொல்லி, நேரி, பொதியம் எனும் மும்மலைகளைப் படைத்து, காவிரி, பெருணை, தென்பெண்ணை, பாலாறு, வைகை, முதலிய ஆறுகளை அணிகலன்களாகக் கொண்டு, விற்கொடி, புலிக்கொடி, மீனக்கொடி ஆகிய மூன்று கொடிகளைத் தாங்கி, மங்கல முரசு, வெற்றி முரசு, கொடைமுரசு எனும் மூன்று முரசுகளைக் கொட்டி இயல், இசை, நாடகம் எனும்முத்தமிழை வளர்த்த முடியுடை மூவேந்தர்கள், ஆண்ட திராவிடம், இன்றுள்ள நிலையையும், அன்றிருந்த எழிலையும் ஒப்பிட்டுப் பார்க்க, ஆயிரமாயிரம் இளைஞர்கள் தயாராகி விட்டனர். பொன் பூத்த நாட்டிலே புண்ணிருக்கக் காரணம் என்ன? வளப்பமிகுந்த நாட்டிலே வறுமை குடி புகுந்த காரணம் என்ன? வீரம் செறிந்த நாட்டிலே வீணர் உரைக்கு ஏற்றம் எப்படிக் கிடைத்தது? கடாரம் கொண்டவன், கங்கை கொண்டவன், யவனம் சென்றவன், இமயம் சென்றவன், என்றெல்லாம் புகழப்பட்ட நாட்டவர், சிங்களச் சீமையில் சீரழிவு; மலாயாவில் தொல்லை, என்று கூறத்தக்க, 'கூலி நிலை' பெற்ற காரணம் என்ன?' பூமிக்கடியிலே இருந்த, ஏன், உலோகங்களைத் தோண்டி எடுக்கவில்லை? கடலுக்குள்ளே குளித்து முத்து எடுத்தவர்கள், கப்பல் தொழிலில் ஈடுபடாதது

என்? புராணக் கதையிலேமற்றவர் மூழ்கி இருந்த போதே, பொறிகள் அமைக்கத் தெரிந்திருந்தவர் வழிவந்தவர் வீட்டிலே, பழைய பஞ்சாங்கக் கட்டுகள் எப்படிவந்து சேர்ந்தன? எலியின் மயிரைக் கொண்டும் ஆடை செய்தவர் என்ற ஏற்றம் ஏங்கு சென்றது? ஆமதாபாத் ஆடைமலை எப்படிக் குவிந்தது? இரும்புக்கும் கரும்புக்கும், உணவுக்கும், உடைக்கும், ஊராள் முறைக்கும் உபதேசத்துக்கும், கப்பலுக்கும் விமானத்துக்கும், காகிதத்துக்கும் கருவிகளுக்கும், வடக்கு நோக்கித் தவங்கிடக்கும் நிலைவரக் காரணம் என்ன? கங்காரு மிருகத்தின், வயிற்றுப்பையிலே அமரும் குட்டி போல டில்லி சர்க்காரிடம் இருக்கிறோம், இதுவா, யவனம் சென்றவர்க்கு ஏற்ற நிலை! குருடரல்ல, ஆனால் காணமுடியாது! என்பது போல் இருக்கும் இந்த நிலைக்குக் காரணம் என்ன, என்று அந்த வாலிபர்கள் கேட்கிறார்கள்!

போன வருஷப் பொங்கலன்றுவது, வாலிபர்களுக்கு ஓர் காரணம் காட்ட முடிந்தது—வெள்ளையர் தந்தனர்வேதனை —என்று கூறினோம்

இந்த ஆண்டு! அவர்களை, அனுப்பிவிட்டவில்லை! இனி அந்தக்காரணம் ஆகாது!

வாலிபர்கள் கேட்கிறார்கள், நாட்டுக்கு நல்வாழ்வுவேண்டும் என்று. பாட்டு மொழியிலே பதிலுரைத்துப் பயனில்லை —எட்டிலைக் காட்டி எய்த்திடவும் அவர்கள் ஆயத்தரார்! எதம்பதில் கூறுவிடில், கேள்வியை மறப்பரோ? அதுவுமில்லை! அந்தக்கேள்வி, வளருகிறது! வாலிபர்களின், பார்வையே கேள்விக்குறியாகி விட்டது! சென்னை போன்ற பெரிய நகரங்களிலே, நாலடிக்கு ஓரடியிலே, பார்வை செல்லும்போது, பெரிய பாங்கிகளைப் பார்க்கும்போது, தொழிற்சாலைகளைக் காணும்போது, மார்க்கட்டுகளில் காணப்படும் சரக்குகளைப் பார்க்கும் போது, தங்களைத் தாங்களே காண உதவும் கண்ணாடியைப் பார்க்கும் போது, ஏறிச்செல்லும் ரயிலைப் பார்க்கும்போது, இறங்கியதும் ஸ்டேஷனிலே உள்ள சிமெண்ட் கட்டடங்களைக் காணும்போது, வீட்டிலுள்ள ஆணி முதல் விண்ணில் வட்டமிடும் விமானம் வரையிலே, அவர்கள் பார்க்கும் போது, ஆளவந்தார்கள் அறிகிறார்களோ இல்லையோ, அந்தப் பார்வை, ஓர் கேள்விக் குறியாகவே இருக்கிறது. அந்தக் கேள்விக் குறி அலட்சியப்படுத்திவிடக் கூடியதல்ல! கூண்டிலடைபட்ட புலியிடம் இருக்கக் கூடும், அது போன்ற பார்வை!! இதை இந்நாள் மனதிலிருத்துங்கள்.

பாகுமொழி கேட்டுப் பரவசமடைந்து, பாலும் சோறும் பழமும் உண்டு, பட்டாடை பூண்டு, பலவளமும்பெற்று, வாழ்வில், மகிழ்ச்சியும் புதுமையும், தன்னாட்சியும் தன்மானமும், தமிழெனப் பொங்கி, இன்பம்பெற வேண்டும் என்று அனைவருக்கும், எமது இந்த விருப்பத்தையே, விழாப்பொருளாகத் தருகிறோம். பொங்குக இன்பம்! பூத்திடுக தன்னாட்சி! பொலிவு பெறுக திராவிடநாடு!—

சிட்டு

வாரப் பத்திரிகை

விலை அரையணா

விபரங்கட்கு:—

மகளிர் இல்லம்

அமராவதி புதூர்.

அடுத்த இதழ்

18—1—48ல் வரவேண்டிய "திராவிட நாடு," பொங்கல் விடுமுறை காரணமாக நிறுத்தப்பட்டு, 25—1—48ல் வழக்கம்போல் வெளிவருமென்பதை வாசகர்களுக்கும் ஏஜண்டுத் தோழர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—

ஏஜண்டுத் தோழர்களுக்கு

—

"திராவிடநாடு" பார்சலைத் தபால் மூலம் பெறும் ஏஜண்டுத் தோழர்கள், இனிமேல் தங்கள் பார்சலைத் தபால் நிலையத்திலேயே (Delivery) பெற்றுக்கோள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

உள்ளம் பொங்கும்

[B. R. சின்ன கிருஷ்ணசாமி]

பொங்குக பாலென்றிந்நாள் புலமை மிக்கோர்
ஆக்கிடுவர் கவிதைகளைச் சுமை சுமையாக
சங்குப்பால் கிடைக்கலையே குழந்தைக்கென்ற
தாயுள்ளம் பொங்குமலால் பால்பொங்காதே.

வயிறார உண்ணவோர் வழியுமின்றி
வந்திருக்க சிறுகுடிலும் மகிழ்வும் இன்றி
துயரமிலே வாடுகிற தமிழர்க்கின்று
சோர்ந்துள்ளம் பொங்குமலால் பால் பொங்காதே.

உழைப்பாளி உழைக்கின்றான் வயிற்றுக்கின்றி
ஓதுவிக்கும் ஆசான் நாவுலர்ந்து நிற்கின்றான்
எழுத்தாளர் கருத்தாளர் ஏமாற்றம் உற்றார்
இவர் உள்ளம் பொங்குமலால் பால்பொங்காதே.

புதிய வெளியீடு!

சி. என். அண்ணாத்துரை, எழுதியது

"சிறு கதைகள்"

விலை ரூ. 1—0—0

கைவசம் உள்ள புத்தகங்கள்

1, ரோமாபுரி ராணிகள்	2—4—0	5. குமரிக்கோட்டம்	1—0—0
2. கம்பரசம்	1—8—0	6. ஆரியமாயை	1—0—0
3. கற்பனைச்சித்திரம்	1—0—0	7. வர்ணாஸ்ரமம்	0—12—0
4. விடுதலைப்போர்	1—0—0	8. மேதினம்	0—5—0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் திருச்சி.

குறிப்பு:— வியாபாரிகளுக்கு 20-சதம் கழிவு தரப்படும். தபால் செலவு தனி. தனிப்பிரதி வேண்டுவோர் தபால்செலவு 4 அணா சேர்த்து மணியாடர் அனுப்பவேண்டும்.

பர்மாவை இந்தியாவுடன் இணைத்தனர்.

பர்மாவிலே, கிளர்ச்சிகளையும் கலகங்களையும் அடக்கி, அமைதியான நிலையை ஏற்படுத்தின பிறகு, ஆங்கிலேயர், வழக்கப்படி, அந்நாட்டுப் பொருளாதாரத் துறைகளில் ஆதிக்கம் வகித்தனர். பர்மியரின் வாழ்வு கெட்டது.

ஆங்கிலருக்கு அடுத்த அளவில் 'இந்தியர்' அதே கைங்கரியத்தைச் செய்யலாயினர். எனவே, பர்மியருக்கு, ஆங்கிலரிடம் ஏற்பட்டது போலவே, இந்தியரிடமும் கோபம் ஏற்பட்டது. இந்தியாவிலிருந்து பிரிந்து விட வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். பாகிஸ்தான் கோரிக்கை பிறப்பதற்குப் பல வருஷங்களுக்கு முன்பே பர்மா பர்மியருக்கே என்ற கிளர்ச்சி துவங்கி விட்டது.

பாரத தேசத்தின் ஒரு பாகமாக இருப்பது நல்லது, பெருமை தருவது, உலகிலே உன்னதமான இடம் பெறும் வழி, என்ற 'உபதேசத்தை' பர்மியர்கள், கேட்க மறுத்தனர். பர்மா பர்மியருக்கே! — என்று முழக்கமிட்டனர். இது பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சி என்று, இந்திய விடுதலைப் போர்த் தலைவர்கள் கூறினர். "அல்ல! அல்ல! இரண்டு நாடுகளையும் கட்டிப் போட்டு, காவல் செய்கிறான் அன்னியன். பர்மா, பிரிந்தால், சீக்கிரம், விடுதலை பெறும்" என்றனர் பர்மியத் தலைவர்கள்.

1935-ம் வருட அரசியல் சீர்திருத்தத் திட்டத்தைப் பிரிட்டிஷார் தயாரித்தபோது, பர்மாவைத் தனிநாடு ஆக்கினர். அதற்கு முன்னாள் வரை, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு உட்பட்டு, பாஞ்சாலக் காங்கிரஸ் கமிட்டியும், பம்பாய்க் காங்கிரஸ் கமிட்டியும் இருந்தது போலவே, பர்மா காங்கிரஸ் கமிட்டி இருந்தது. பர்மா, தனிநாடு ஆக்கப்பட்டுவிட்ட பிறகு, காங்கிரசின் 'மேலாதிக்கமும்,' இந்திய சர்க்காரின் 'மேலாதிக்கமும்' போய்விட்டது. பர்மா, தன், விடுதலைக் கிளர்ச்சியை நிறுத்திவிடவில்லை —விடுதலை பெறாமலும் போகவில்லை.

பர்மா, சுதந்திர நாடாகி விட்டது.

இந்தியத் தலைவர்கள் தங்கள் வாழ்த்துகளை அனுப்பியுள்ளனர்

தனிநாடாகப் பிரிக்கப்பட்டாலே, இரத்தம் புரளும் நிலை ஏற்படுகிறது, என்பதற்கு பாகிஸ்தானைக் காட்டுகிறார்கள், நித்த நித்தம். இதோ பர்மா, தனிநாடாக நாது தலைமுறையிலேயே பிரிக்கப்பட்டது; என்றாலும் பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் நேசம், முன்பு இருந்ததை விட இப்போது வளர்ந்திருக்கிறது. காரணம் என்ன?

பர்மா, பிரியவேண்டும் என்ற கிளர்ச்சி நடந்தபோது, அந்த நாள் தலைவர்கள், இங்கு அதை எதிர்த்து, துவேஷமும், கொதிப்பும், மனக்கசப்பும், முற்றக்கூடிய வகையிலே பிரசாரம் செய்து, மக்கள் மனதிலே மருட்சியும், பீதியும் ஏற்படும் நிலையை உண்டாக்காமல், பிரிவது என்று பர்மா தீர்மானித்துவிட்டால் நாம் தடுப்பது தவறு, என்று யுக்தமான போக்கைக் கொண்டனர். அதனால், பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நேசம் கெட அவசியமில்லாமல் போய்விட்டது. மேலும், இந்து மார்க்கத்துக்கும் இஸ்லாத்துக்கும் உள்ளூரப் புகைந்துகொண்டிருந்த விரோதம்போல, பர்மியரின் புத்த மார்க்கத்துக்கும் இந்து மார்க்கத்துக்கும் பூசல் இல்லை. எனவே, பர்மா, அண்டை நாடு என்ற அந்தஸ்த்துப் பெற்றவுடன், நேசம் அதிகரித்தது.

தனிநாடாகப் பர்மா பிரிந்தால், சுயராஜ்யப் போரை வெற்றிகரமாக நடத்த முடியாது, ஏகாதிபத்யத்தின் ஏவலளாகி விடும், என்று பேசியவர்களே, இன்று, பர்மாவின் புகழைப் பரப்புவதுடன், நேசத்தை வளர்த்துக்கொள்ளவும் ஆவலாக உள்ளனர்.

பர்மாவின் மனதிலே, இயல்பாகவே ஒரு சந்தேகம் இருந்துவந்தது. இந்தியாவுடன் இணைந்திருந்தால், பர்மாவுக்குத் தனியான வாழ்வு இராது, சர்வம் இந்திய மயமாகி விடும் என்று எண்ணினர்.

அந்தச் சந்தேகத்தை வளர்த்துவிட்டது, இங்கிருந்து சென்று, வியாபாரம் செய்தும், வட்டிக்கடை நடத்தியும் பலர் பணம் திரட்டிய செயல்.

ரங்கோன், பர்மாவின் தலைநகரம் —ஆனால் அந்த நகரில், பர்மியரை விட இங்கிருந்து சென்றவர்களுக்கே செல்வாக்கு அதிகம்!

தனிநாடு ஆகிவிடாவிட்டால், சிறிய பர்மா, இந்தியாவுக்கு ஒரு பண்ணையாகி, பர்மியர், அந்தப் பண்ணையில் வேலை செய்வோர் ஆகிவிடுவர் என்று எண்ணினர்— எனவேதான் பர்மா பர்மியருக்கே! என்று கிளர்ச்சி செய்தனர்—வெற்றியும் பெற்றனர்.

இப்போது பர்மா, தன்னாட்சி பெற்றதுடன், தன் செல்வத்தை யாரும் சுரண்டிக்கொண்டு போக முடியாதபடி, பல சட்ட திட்டங்களையும் இயற்றிவிட்டது.

இப்போது நமது பகுதியிலே, வடநாட்டு மார்வாடிகள், குஜராத்திகள் மூல்டானிகள் இருப்பது போல, முன்பு பர்மாவில், 'இந்தியர்கள்'— குறிப்பாக நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள்—இருந்தனர்.

இனி அந்தநிலை மாறிவிடும்.

விடுதலை விழாவைக் கொண்டாடிய பர்மாவுக்கு, மனதிலே ஆழப் பதிந்துள்ள விசாரம் ஒன்று இருக்கிறது—அதுதான் — அவுங்சானின் அநியாயமரணம். இந்தவிசாரம், இந்தத் தலைமுறையில் பர்மியர் மனதைவிட்டு நீங்கக்கூடியதல்ல.

கடந்த போரின்போது ஏற்பட்ட பலத்தசேதம், பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்தி இருக்கிறது. நாட்டிலே, குமுறல்கள் வேறு உள்ளன. கட்சிப்பூசல், பேச்சுமேடையைக்கடந்து, களத்துக்குக்கொண்டு வந்து விட்டது, மக்களை. கொலை, கொள்ளை, ஆட்தூக்குதல், முதலியவைகள் வேறு உள்ளன. இவ்வளவையும் சமாளித்து, அமைதியை ஏற்படுத்தி, பர்மா, விடுதலையைப் பயன்படுத்த வேண்டும். இதற்காக, ராணுவசம்பந்தமான ஒப்பந்தம், பிரிட்டனுடன் நடைபெற்றிருக்கிறது— வியாபார சம்பந்தமான ஒப்பந்தமும் உண்டு. இந்த ஒப்பந்தங்களின் பயனாக, இன்னும் கொஞ்சக்காலத்துக்கு, பிரிட்டிஷ் செல்வாக்கு, பர்மாவில் இருக்கத்தான் செய்யும். ஆனால், இந்த நிலையையும் கடந்து, பர்மா, விரைவில் முழுப்பொலிவுடன் விளங்கும் என்பதிலே சந்தேகமில்லை.

ஒரு வைசிராய், பர்மாநாட்டுச் சிங்காதனத்தைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார்!

இதோ, மவுண்ட்பேடன், அதே சிங்காதனத்தைத் தூக்கிக்கொண்டு போய், பர்மாவுக்குத் திருப்பித்தரப் போகிறார்.

காவியம், ஓவியம், இரண்டுக்கும், ஏற்றதோர் சம்பவம்!

❀

பொங்கலோ பொங்கல்!

[கலைவாணர், என். எஸ். கிருஷ்ணன்]

பொங்குவது பொங்கல்! பொங்க வேண்டுவது பொங்க வேண்டும்; பொலியவேண்டும். பொங்கவேண்டுவது பொங்காவிட்டால் வாழ்வேது? சுகமேது? சுவையேது? ஒன்றுமேயில்லை. இதை நன்றாக அன்றே தெரிந்து வைத்தவர்கள் ஆதித்தமிழர்கள். பொங்கல் தமிழ் மக்களின் தனித்திருநாள்.

நாட்டுக்கும் நாட்டு மககளுக்கும் உயிர்போன்றது எது? அது பொங்க வேண்டும். பின்னர் எல்லாம் தானாகவே பொங்கும். இன்பவாழ்வு ஏற்படும். தேசமக்களுக்குத் தேவையானதும் ஜீவாதாரமானதும் உணவு. சோத்துக்குள்ளேயிருக்குது சொக்கலிங்கம் என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்! உணவுப்பஞ்சம் மக்களை அவதிப்படுத்தும் இன்றைய நிலைமையில், பயிர்த்தொழில்வளர்ந்து செழிக்க வேண்டுவது எவ்வளவு அவசியமென்பதை எண்ணிப்பாருங்கள். உழவர்கள் எவ்வளவு பாடுபட்டு நிலங்களைச் செப்பனிட்டு, உழுது, சாலடித்து, நீர்பாய்ச்சி, நடவுநட்டு, களைபிடுங்கிக்காத்துவருகிறார்களென்பதை நினைத்துப் பாருங்கள். பாட்டாளி செய்யும் தொண்டு பாரினும் பெரிதேயாம். ஆஹா! அந்தஆனந்தக் காட்சியை என்னென்று சொல்வது! நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடும் பாட்டாளிமகன் பள்ளத்தில் வசிக்கிறான். மழையில் நனைகிறான், வெயிலில் வேலைசெய்கிறான். ஓய்வு என்பதே அவனுக்கு இல்லை. சதா உழைப்பு. அவன் பரிசுத்தத் தியாகி. அவன்உழைப்புத், தேசத்தை வாழ்விக்கிறது. எப்படி?

"சந்தனக் கலப்பை வெட்டிப்
பள்ளமுழுக—ஒயிலா......"

மனைவி அவனுக்கு உற்றதுணையாக நின்று தேசத்தின்ஜீவனை அவள் தங்கக்கையினால் நடுகிறாள், அது சம்பா நாத்து, சாதிச்சம்பா நாத்து.

"சாதிச்சம்பா நாத்தெடுத்துப்
பார்த்து நடுறா—ஒயிலா......"

பயிர் செழித்துவளர நீர் வளம் நிறையவேண்டு மல்லவா—அதற்கு உழவர்கள் வானம் பார்க்கிறார்கள். மழைக்காகத்தான். மழைச் செல்வத்தை வானம் வரையாது வழங்க வேண்டும். குதூகலமாகக் கும்மாள மடித்துக் கொட்டி முழக்கி வேண்டுகிறார்கள்.

மழை

பொழியோனும் வளரோ
னும் பூமி
பொதி பொதியாக விளை
யோனுஞ்சாமி

ஏர்

உழுகாளை பசுமாடு ஆடு
பண்ணைத்
தொழில் நீடும்படியேமெய்ப்
பாடு—பட்டு
எளியார்தம் உறவே
கொண்டாடு
வழிநாடு அதுவே மேம்பாடு
வாழ்வோங்கும் பூமாந்தர்
யாவர்க்கும் வானம்
(பொழி யோனும்)

கடகடவென்று இடி இடித்தது, பளிச்சுப்பளிச்சென மின்னல் கண்களைப் பறித்தது. மழைக்குறிகள். உழவர்களுக்குச் சொல்ல முடியாத உற்சாகம். ஆடுகிறார்கள், பாடுகிறார்கள். ஆனந்தக் கூத்துத்தான்.

"ஆற்றுவெள்ளம் நாளைவரத்
தோற்றுதே குறி—மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே.
நேற்று மின்றும் கொப்புசுற்றிக்
காற்றடிக்குதே—கேணி
நீர்ப்படுச் சொறித் தவளை
கூப்பிடுகுதே.
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்றடைக்குதே—மழை
தேடியொரு கோடி வானம்
பாடியாடுதே."

மழையினால் ஆற்று வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. பாலை, மருதம், குறிஞ்சி, நெய்தல், முல்லை ஆகிய ஐந்து வகை நிலங்களையும் ஆற்றுவெள்ளம் செழிப்படையச் செய்கிறது. மழைபெய்யாவிடில் எல்லாம் கெட்டுவிடும். திருவள்ளுவர் "வான் சிறப்பு" என்னும் இரண்டாவது அதிகாரத்தில் வேண்டுங்காலத்தில் மழை பெய்யாது பொய்க்குமாயின் உயிர்களைப் பசிக்கொடுமை வருத்தும் என்றும், உழவுத் தொழில் நிறுத்தப்படுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"விண்ணின்று பொய்ப்பின்
விரி நீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி"
(குறள்)

"ஏரி னுழாஅ ருழவர் புய
லென்னும்
வாரி வளங் குன்றிக்கால்"
(குறள்)

உழைப்பின் பயனைக் கண்ணாரக் கண்டு குதூகலிக்கும் திருநாள் தைமாசப்பொங்கல்-தமிழரின்நல்வாழ்வு தொடங்கும் நன்னாள் தைப்பொங்கல். பூமிக்கெல்லாம் போக போக்கியங்களை நல்குவது தைப் பொங்கல்.

"பூமிக்கெல்லாம் போகபோக்ய
க்ஷேம
மோங்கவே—பொங்கல்

புண்ய பூமி மாந்தர் நல்ல
போகிப் பொங்க
லானப் பொங்கல்
மாசில்லாத் தை மாசப்
பொங்கல்
மங்கலப் பொங்கல்—பொங்கல்
வாச மனையும் பூசி மொழுகி
வைத்திடும்
பொங்கல், பொங்கல்"

இந்தப் புனித நாளன்று தமிழர் வீடுகளில் தனிக் கொண்டாட்டம் நடைபெறும். குடுகுடு கிழவர் முதல் குறு குறு நடை. பழகும் குழந்தைகள் வரையிலும் எல்லோருக்கும் ஏகப்பட்ட குதூகலம். தமிழர் மனைகளெல்லாம் தங்கமயமாகஜொலிக்கும். அலங்காரம் எப்படியென்று பாருங்கள்.

"வேப்பங் குழையில் காப்புக்
கட்டி
வீடு ஜொலிக்குமே
வித விதமாச் சிறுசும் பெரிசும்
புதுசை உடுக்குமே
காதோலைக் கருப்புச் சல்லைக்
கருக்குப்
பாசியே வைத்துக்
கமழும் மஞ்சக் கொழுந்துங்
காவிக்
கல்லும் பூசியே
பேத்தும் பிதுரும் எடுத்தக்
கிழட்டுப்
பாட்டன் பாட்டியும்
—அன்று
பூத்த மலர் போல் விளங்கிடும்
மணப்
பொங்கலின் பண்டிகையாம்"

பாட்டாளி மக்கள் பயன் பெறும் பண்டிகைதான் தைப்பொங்கல். எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்பதே தமிழனின் தனிப்பண்பு. பிறரின்பம் கண்டு தானின்புறும் மாசற்ற குணம் தமிழனின் உடன் பிறந்தது. நம்நாடு நலம் பெற்றோங்க வேண்டும், நாட்டு மக்கள் நலமாக வாழவேண்டும். இதுவே எனது இதயபூர்வமான ஆசை. இதிலே எனக்குக் களிப்பு,

அதனால்,

"பாலுப் பானைப் பொங்க
வேணும்—மஞ்சத்
தாலிக் கவுர்தங்க வேணும்
—உழுத
நாலு வித்தைச்சாலு விட்டா
நாப்பதா மொளைச்சு வந்து
நல்லகுடியோங்க வேணும்
—பஞ்சப்
பட்டினியும் தாழ வேணும்
--தினம்
மாடுகட்டிக் காடுழுக மானம்
பார்த்த சீமையிலே
மக்கள் குடியோங்கவேணும்"

✽

இப்படியெல்லாம் நடந்தது!

லட்சுமணபுரிக்கு 35 மைல் தொலைவிலுள்ள ஒரு கிராமத்தில், கிணறு ஒன்று; பல ஆண்டுகளாக, குடிக்கவும் குளிக்கவும் அதனை உபயோகித்து வந்தனர் அந்தப் பகுதி மக்கள்.

அதன் தண்ணீர் கொஞ்சம் குழம்பியது. அதனைப் போக்கித் தெளிவாக்க, ஏதோ ஒருவனமூலிகையைக் கிணற்றிலே போட்டு, கிணற்றைச் சிலநாட்கள் மூடிவைத்தனர்.

கிணறு மறுபடியும் உபயோகிக்கப் படவேண்டுமென்று ஓர் நாள், மூடியைநீக்கிவிட்டனர். ஒருஆசாமி, கிணற்றிலே இறங்கினான் குளிக்க, அவ்வளவுதான், ஆள்வெளியே மீண்டும கிளம்பவேஇல்லை. வேறோர் ஆள் இறங்கினான், மறுபடியும் கிளம்ப வில்லை! மற்றொருவன், மேலும் ஒருவன, இப்படி ஏழுபேர் அன்று குளிக்கச் சென்றார்கள்; கிணற்றுக்குள்ளிருந்து வெளிக்கிளப்பவில்லை. உடனே மேலும் யாரும் இறங்க வேண்டாமென்று தடுத்துவிட்டு, போலீசார், கிணற்றைத் துழாவிப் பார்த்தனர். கருகிப்போன ஏழு பிணங்களைக் கண்டனர்!

* * *

தண்ணீரைத் தெளியச் செய்ய வேண்டும் என்று, வன மூலிகை போட்டார்களே, அதனால், தண்ணீர், விஷ நீராக மாறி விட்டது.

* * *

புகழின் வழி

அரண்மனை வரையில், ஒருவரின் புகழ் செல்வது—சில சமயங்களிலே இன்பபுரிக்கு அழைப்புச் சீட்டுபெறுவதாக இருக்கும். வேறு சில சமயங்களிலே, அதுவே அபாய அறிவிப்பு.

அம் அயிலோ டி லா ஹூசே, எனும் அறிஞர், 1634 ல் பிறந்தவர்—1706 ல் இறந்தார். அவருடைய எழுத்து வன்மையால ஏற்பட்ட புகழ், பிரான்சு அரச குடும்பத்தினரின் செவியில் விழுந்தது — அவருக்கு ஆதரவு தந்தனர்—அன்பு காட்டினர். அரண்மனையின் நேசம் கிடைத்தது முதலில் —பிறகு?

அவர் பாதிரிமார்களின் போக்கை விளக்கி எழுத ஆரம்பித்தார்.

உடனே, யாரைப் பெரிய அறிஞர் என்று அரண்மனையில் கொண்டாடினார்களோ, அவர் மீதே சீறலாயினர். பாதிரிகள். "இவனோர் பாதகன்! எங்களையெலாம் இழித்தும் பழித்தும் எழுதுகிறான். இவனை அடக்கியாகவேண்டு" என்று முறையிடவே, அந்த எழுத்தாளர், பிரான்சு சர்க்காரால் குற்றம் சாட்டப்பட்டு, (பஸ்தீல்; சிறைக்கு அனுப்பப்பட்டார்.

* * *

பெத்ரோ லோபேஸ் அயாலா,

ஸ்பெயின் நாட்டு பிரபல எழுத்தாளர். போரின்போது இவர் கைது செய்யப்பட்டு, இங்கிலாந்தில், சிறைபடுத்தப்பட்டார். விலங்கிட்டு வேதனைப்படுத்தினர். தமது வேதனைகளைக் கவிதா உருவில் அமைத்தார். ஏராளமான பணம் கொடுத்து இவரைச்சிறை மீட்டனர். (1332—1407.)

* * *

விசித்திரப் போக்கு

"இந்தப் பயல்கள் தவறு செய்யும்போது கண்டிக்க நேரம் இருக்கிறதா இராதா, என்பதற்காகவே, சமயம் கிடைக்கும் போதெல்லாம், இந்த வேலைக்காரர்களை நான்கண்டித்துவிடுகிறேன்" என்று கூறுவாராம், ஆல்புஷியஸ் என்பவர் காரணமின்றித தன் வேலையாட்களைக் கண்டிப்பது இவர் வாடிக்கை. ஏன்? என்று, ஹோரேஸ் எனும் பிரபல இலக்கியகர்த்தா கேட்டபோதுதான் மேலே குறிப்பிட்டுள்ளபடி பதிலுரைத்தாராம். இந்த ஆசாமி. நியாயத்தின் போக்கைப் பார்த்தீர்களா!

* * *

பிரான்சிஸ் பேபியப்

புரட்சிக் காலத்தில் பிரன்சு நாட்டில் இருந்தஎழுத்தாளர்! கிரேக்கஸ் என்ற புனைபெயர் கொண்டவர். இருமுறை கூண்டில் நிறுத்தப்பட்டார், புரட்சி மூட்டும் கட்டுரைகள் எழுயதற்காக.

பிறகு ஒரு புரட்சிக்காக இரகசிய சங்கம் துவக்கினர். உடனிருந்தவனின் துரோகத்தால் கண்டுபிடிக்கப்பட்டார். கோர்ட் சென்று தண்டனை ஏற்கக் கூடாது என்று, தற்கொலை செய்து கொள்ள எத்தனித்துக் கத்தியால் குத்திக் கொண்டார். பலிக்கவில்லை. பாதிப் பிராணனுடன், கோர்ட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டார். தூக்குததண்டனைதரப்பட்டது. இரத்தம் ஒழுக ஒழுக, தூக்கு மரம் ஏற்றப்பட்டார். (1797)

* * *

ஆண்டிஸ் தினிஸ்

கிரேக்கநாட்டு தத்துவ நிபுணர். சாக்ரடீசை வதைத்த மெலிடஸ் என்பவனுக்கு மரண தண்டனையும், அன்யூடஸ் என்பவனுக்கு நாடு கடக்க வேண்டிய தண்டனையும் கிடைக்கச் செய்தவன். கி. மு. 400ல் வாழ்ந்தவன். அன்யூடஸ் தவறு செய்தவன் என்பதை மக்கள், சாக்ரடீசின் மரணத்துக்குப் பிறகே தெரிந்துகொண்டு விரட்டினர். ஹெராக்ளியா என்னும் ஊரில், மக்களால் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டான்.

* * *

அரண்மனை வேண்டாம்

கோமகனுக்கு ஆசிரியனாக வருமாறு ரஷிய நாட்டு ராணியின் அழைப்புக் கிடைக்கிறது, அறிஞர் ஆலம்பர் என்பவருக்கு.

அறிஞர் அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

மறுபடியும் அழைப்பு வருகிறது, ராணியிடமிருந்து.

"தாங்கள் ஏன் இங்குவர இசையவில்லை என்பது தெளிவாக எனக்குத் தெரிகிறது. சொந்த நாட்டிலேயே தங்கி, ஆராய்ச்சிக்குத் தேவையான படிப்பில ஈடுபடவும், நண்பர்களுடன் கலந்திருந்து சிம்மதியாக இருக்கவும் ஆசைப்பட்டே, தூர தேசம் வர மறுக்கிறீர். ஆனால் கவலை வேண்டாம். உமமுடைய நண்பர்கள் எவ்வளவு பேர் உண்டோ, அவ்வளவு பேரையும் இங்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுங்கள். அவர்கள் அனைவருக்கும் போதுமான வசதியை நான் செய்து தருகிறேன்" என்று ரஷிய ராணி தமது அழைப்பிலே குறிப்பிட்டிருந்தார்.

எவ்வளவு பெரு மதிப்பு இருந்தால், இந்த அறிஞருக்கு இத்தகைய அழைப்பு, ரஷிய ராணி காதரைனிடமிருந்து கிடைத்திருக்கும்! அரச குடும்பத்தில் சென்று, ஆசிரியத் தொழில் செய்ய அந்த அறிஞருக்குக் கிடைத்ததுபோல வாய்ப்புக் கிடைத்தால், எவ்வளவு பேர் மறுப்பார்கள்! விழுந்தடித்துக் கொண்டல்லவா ஓடுவர்!! ஆனால் பிரான்சு நாட்டு அறிஞர் டி. ஆலாம்பர், தமது ஆராய்ச்சி பெரிதென மதித்தாரே யொழிய, அரண்மனை வாசம் பெரிது என்று கருதவில்லை—அதனைத் துச்சமெனமதித்தார்— அவர், விஞ்ஞான நூற்கள் சில எழுதினார்—சமூக, மத சம்பந்தமாக அவர் கொண்டிருந்த கருத்துகள் ஏறக்குறைய, வால்டேர் கருத்துகள் போன்றவைவாம். (1717-ல பிறந்தார் —1783ல் இறந்தார். அவர் தீட்டிய பதினெட்டு நூற்கள், பிரன்சு நாட்டு விஞ்ஞான அறிவுத் துறைக்குப் பெரிதும் பயன்பட்டன.

இத்தகைய அறிஞரின் பிறப்பு வளர்ப்பு விசித்திரமானது!

கிராமப் பெரியதனக்கார அதிகாரி, ஒரு தினம், மாதா கோவில் அருகே, ஒரு குழந்தை கிடப்பதைக் கண்டார்—பச்சிளங் குழந்தை!

எந்தப் பாவியுடையதோ! ஏனோ இப்படிச்செய்தாள்? என்று எண்ணிய அந்த அதிகாரி, ஊரிலே வேறோர் மாதிடம் இக்குழந்தையைக் கொண்டுபோய்க் கொடுத்தார்,வளர்க்கும்படி. பிறகு குழந்தையின் தகப்பன், குழந்தையை வீதியிலே விட்டுவிடத் துணிந்த காதகியைக் கண்டித்துவிட்டு, குழந்தை இருக்கும் இடமறிந்து வந்து, எடுத்துச் சென்றான்.

இப்படி அனாதையாக, மாதா கோயிலருகே கிடந்த குழந்தைதான், பிறகு அறிஞனாகி, ரஷியநாட்டு ராணியாரிடமிருந்து அன்பழைப்புக் கிடைக்குமளவு புகழ்பெற்றார்.

அனாதை பிறந்தபோது! அரண்மனைக்கு அழைப்பு, பிறகு! இந்த அறிஞருக்கு இங்கிலே! வேறுபலர் உண்டு! அரண்மனையில் பிறந்தும், அனாதைபோன்ற நிலையைப் பெற்றவர்கள்.

* * *

"அப்பா! எழுந்திரடா, மணி இரண்டாகப் போகிறது—போதும் பாடினது. மாலையிலே பாடிக்கொள்ளேன்."

"அடாடா! சனியன்! கொஞ்ச நேரம் சும்மா இருக்கப்படாதோ!"

"சாரீரம் கூடக் கம்மிண்டு இருக்கேடா"

"நாசமாப்போக! நீ தொலையணும் நான் க்ஷேமப்படணும். எங்கிருந்து எனக்குச் சங்கீதம் வரும்! இப்படி, அபசகுனமாக, நான் பாடறபோதெல்லாம் சளசளன்னு சத்தம் செய்திண்டிருந்தா"

"சரிடாப்பா. சங்கீதத்திலே மூழ்கிண்டிரு, சாதம் கூடவேண்டாம். நான் சனியனாஇருக்கேனேஉனக்கு? பத்து மாசம் சுமந்துபெத்த வயிறு கேட்கலே, காலையிலே இருந்து கத்திண்டிருக்கயே, பசி காதை அடைக்குமேன்னு சொன்னேன். உன் இஷ்டம் போலச் செய்."

"வாயை மூடிண்டு நீ போய் ரேழித் திண்ணையிலே படு."

தாய் படுத்துக்கொண்டு கேட்கிறார்கள், மகன் பாடிக்கொண்டிருப்பதை.

தாயாரைச் சனியன், நாசமாகப் போ, வாயை மூடு, என்று கண்டபடி ஏசின, மகன்,

"அன்னையும் தந்தையும், தானே,
பாரில், அண்டசராசரம் கண்
கண்ட தெய்வம்"

என்று அழுத்தந் திருத்தமாகப் பாடிக்கொண்டிருந்தான் பாட்டுக்கும், அவன் பேசின பேச்சுக்கும் பொருத்தமில்லையே என்பீர்கள்; என்ன செய்வது, தாளத்துக்கும் கூடத்தான் பொருத்தம் வரவே இல்லை, ஒருமணி நேர அழுகைக்குப் பிறகு. பாவம் என்ன செய்வான்!

அப்பா! அன்னையும் தந்தையும்

(2-ம் பக்கம் பார்க்க)

கேள்வியும் — பதிலும்

1. இன்றைய மந்திரிசபை தான் இழைக்கும் பிழைகளுக்கு, "நமது அரசாங்கம்நேற்றுப்பிறந்தகுழந்தை, ஆகவே பிழைபலநேருவது சகஜம்" என்கிறார்களே, சரியா?

நிர்வாக அலுவலிலே பழக்கம் பயிற்சி, அனுபவம், ஏற்படுவதற்கு முன்பு, பிழைகள், அந்தத் துறையில ஏற்படக்கூடும். ஆனால் இன்றைய மந்திரிசபை, செய்யும் பிழைகள், "பாலிப லீலை" என்று கூறு[illegible] அள வினதோ, வகையினதோ அல்ல. நோக்கம், வேலைத்திட்டம் ஆகியவை இன்றி அலுவல் நடத்தப்படும் அமுலாக இருக்கிறது. இது கண்டிக்கத் தக்கது—சகஜம் என்று கூறிவிடக் கூடியதல்ல. பகவானின் அவதாரம் என்று வைதிகர்கள் கூறும் கண்ணனின் பாலிய லீலைகளைக்கூட யசோதையிடம் முறையிட்டனர் அவ் ஊர்ப்பெண்கள், என்று கதை படிக்கக்கேட்டதுண்டு. இந்தக் குழந்தையோ, பாலியலீலை செய்வதுமட்டுமல்ல, கேட்டால், கண்டித்தால், புன்சிரிப்பால் மயக்கவோ, அழுது மனதை உருகச்செய்யவோகூட முயல்வதில்லை — "அகோரக்கூச்சலுடன்" கிளம்பி, அடக்குமுறையை வீசுகிறது. இந்நிலையை, சகஜம் என்று கருதிவிடமுடியாது. மேலும் பால்ப[illegible], பக்குவமில்லை என்று கூறுவது, [illegible]றிந்து கூறுவதானால் திற[illegible] கொண்டவர்களின் ஒத்துழைப்பையும், அதுவும் முடியாவிட்டால் ஆலோசனையையாகிலுமாவது, கேட்டுப்பெறவேண்டும். அதுவும் இல்லை. ஏதோ ஒரு குறிக்கோளுக்காக—அதாவது வெள்ளையர் ஒழிப்புக்காக—என்று ஏற்பட்ட குழு, ஆட்சிப் பீடத்தில் அமரும் வாய்ப்புப்பெற்றதும், பழையபெருமையே போதும் என்று [illegible] தகுதி, திற[illegible]வாய்ந்த[illegible] திட்ட[illegible] ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இதனைச்சகஜமில்லை என்று கருது[illegible]து, நாட்டுக்கு நேரிடும் ஊறுக்கு, நாமும் உடந்தையாக இருக்கும் போக்காக முடியும்.

2. தங்களுக்குப் போடப்படுவது போல 'அறிஞர்' என்ற பெயரை, யாருக்கும் குறிக்கலாமா?

தாராளமாக!

3. ஏன், கேள்வி கேட்பவர் பெயரைக் குறிப்பிடுவதில்லை?

அந்தந்த ஊர்களில் விவாதம் தொடர்ந்து நடக்கும் — அவசியமற்ற — வீண் எரிச்சல் தரும் விவாதம்—அது கூடாது என்பதற்குத் தான்.

4. நக்கீரன் என்ற புனைபெயருடன் எழுதுபவர் யார்?

ஈழத்தடிகள், இப்போது.

5. சென்ற 2 வருடங்களுக்கு முன்பு ஈரோட்டில் பேசியபோது பாகிஸ்தான் பெற்றதும் ஜனாப் ஜின்னாவைக் கலந்துபேசி, திராவிடநாடு பிரிவினை விஷயமாகத்திட்டம் தயாரிப்பதாகக்கூறினீரே—உண்மைதானா?

உண்மைதான். ஜனாப் ஜின்னா, பாகிஸ்தான் பிரதேசத்துக்குப்போக மாட்டார். பம்பாயில் இந்தியாவின் ஆட்சியின்கீழ் இருப்பார், அப்போது இந்தியாவிலுள்ள முஸ்லீம்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருக்கும் என்ற [illegible]தில் சொன்னேன். இப்போது அவர் கராச்சியில் இருக்கிறார்—தனி நாட்டில்—இந்தியநாட்டு விவகாரத்துக்கு இனி அவருடைய ஆலோசனையை நாடுவது, அவசியமற்றதுமட்டுமல்ல, சர்வதேச நியதிப்படியேதவறுங்கூட.

6. கட்சியின் கொள்கை திட்டம் ஆகியவற்றை அமைத்தல் ஆகிய அலுவல் எனக்கு இல்லை என்று கூறியிருக்கிறீர் — திராவிடர் கழகத்துக்கும் எனக்கும் எள்ளளவு தொடர்பும் இல்லை என்பது அல்லவா இதன் பொருள்?

அல்ல. திராவிடர் கழகத்தின் பல்லாயிரக்கணக்கான அங்கத்தினர்களிலே ஒருவன் என்ற முறையிலும் அதே முறையிலே பத்திரிகை மூலமும், வேறுமுறைகள் மூலமும் கூடுமான பணி புரிவது என்கிற அளவிலும், நிச்சயமாகத் திராவிடர் கழகத்தில் தொடர்பு கொண்டவன் தான். கட்சியின் வேலைத்திட்டம் ஆகியவைகளை நிர்மாணிக்கும் பொறுப்பு எனக்கு இல்லை, என்பது தான் பொருள்.

7. கல்வி அமைச்சர் துவக்கியுள்ள கலைக்களஞ்சியம் சரியான தமிழில் இருக்குமா? தங்கள் அபிப்பிராயம் என்ன?

*முன்கூட்டி எப்படிச் சொல்லமுடியும்? கலைக்களஞ்சியம் தமிழ்[illegible] மட்டுமல்ல, பகுத்தறிவு ஒளியுடன் இருத்தல் வேண்டும் என்பதுஎனது ஆவல் —உங்கள் எண்ணமுங்கூட. தோழர்கள் குருசாமி, அன்பழகன் ஆகியோர், கலைக்களஞ்சியம்பற்றி அமைச்சர் அமைத்த ஓர் கூட்டத்தில், இதுபற்றி வலியுறுத்தியும், விளக்கமாகக்கூறியும் இருக்கிறார்கள். மனு என்ற வார்த்தைக்குப்பொருள் தருவதானால் ஆரிய ஆதிக்கத்தை நிலை நாட்டப்பல அநீதிகளைச் சட்டமாக்கியவன்—என்று இருத்தல் வேண்டும். கங்கை [illegible] [illegible] [illegible] [illegible] என்று இருத்தல் கூடாது, இயற்கையில் தோன்றிவரும் வற்றாத ஆறு— வளம் தரும் பெருநதி என்று குறிக்கவேண்டும், என்று இவ்வாறாகவெல்லாம், அந்த நண்பர்கள் எடுத்துக்கூறினர். அமைச்சரும் அதுவே முறை என்று கூறினாராம். ஆனால் நண்பர்களின் நன்மொழிப்படியே, கலைக்களஞ்சியம் அமையுமா என்பது, இப்போது, கூறுவதற்கு இயலாதே! அமைச்சரைப் புடைசூழ்ந்து நிற்பவர்கள் என்னென்ன கூறுவரோ! அவர் மறவாமல் கூறிவரும் புராணக்கதைகள் உண்டாக்கும் எண்ணம் அவரை எங்கு

கொண்டுபோய் நிறுத்துகிறதோ, யார் கண்டார்கள்!

8. விஞ்ஞான முன்னேற்றத்தைத்தடுப்பது இங்கு மதம்தான் காரணமென்கிறீரே மேலைநாட்டில் மதத்துடன் விஞ்ஞானமும் சேர்ந்து வளர்ந்து வருகிறதே. இதற்கு என்ன சொல்கிறீர்?

என்ன சொல்வது! அங்குள்ள மதம், விஞ்ஞானம் வளரவழிவிடுகிறது, இங்கு, 'மலைபோல் மாடுபடுத்திருக்கிறது' என்றுதான்பாடவேண்டும். அங்கு, விஞ்ஞானம் தோன்றியதும், மத ஆதிக்கக்காரர்கள், பலமாக எதிர்த்தனர் — ஜெபமாலை கொண்டுமட்டுமல்ல, கோல் கொண்டவனின் துணையைக்கொண்டுங்கூட. நாத்திகப்பட்டம் சூட்டினர், நாடு கடத்தினர். மத ஆதிக்கத்தையும், கொடுங்கோன்மையையும், எதிர்த்துப் பலமானபிரசாரம் நடைபெற்றபிறகுதான், அங்கு மதம், விஞ்ஞானம் வீறுகொண்டெழுந்துவிட்டது, இனி நம் தலை தப்பினால் போதும் என்று இருந்துவிட்டது. ஒருகாலம்,அங்கும் இருந்தது,அரசுகளெல்லாம், குருமார்களின் கோபம் கிளப்பினால் ஆடியகாலம்! ஒரு அரசன், குருவின் மாளிகை வாயலில், தலையில் பாகையின்றி, காலில் செருப்பின்றி, மூன்றுநாட்கள் காத்துக்கிடந்தான், அவருடைய மன்னிப்புபெற. அப்படி இருந்த காலம் போய், மக்கள் மதவாதிகளை இருக்க வேண்டிய இடத்தில் இன்னபடி இரு என்று திட்டமாகக் கூறினர் —விஞ்ஞானம், கருவிகளைக் கண்டுபிடித்து அளிப்பதற்கு முன்பு, கருத்தில் தெளிவை உண்டாக்கி, அச்சத்தைப் போக்கிற்று. அதனாலேயே பிறகு, அங்கு, மதம் இருந்தாலும் விஞ்ஞானம் வளர முடிந்தது. இங்கு அவ்விதம் இல்லையே! விஞ்ஞானம் தயாரிக்கப்படுவது மேனாட்டில்— உபயோகப்படுத்தப்படுவது இங்கு— ஆனால் உத்தமர், உயர்ந்தவர்,வாழ்த்துக்கும் வணக்கத்துக்கும் உரியவர் மதவாதிகள் என்றல்லவா நிலைமை இருக்கிறது.கட்டளையிடும்அதிகாரம் மதத்துக்குத்தானே இங்குஇன்றும் இருக்கிறது. அங்கு மதம், கட்டளையிடும் வேலையை, படிப்படியாக விட்டு விட்டது.

9. சுயமரியாதைக் கழகம் ஜஸ்டிஸ் கட்சிக்கு அடிபணிந்து நசித்து விட்டது என்று வல்லத்தரசு கூறுகிறாரே, உண்மையா?

அவ்விதம் ஆகிவிடும் என்ற அச்சத்தால் அவர் சுயமரியாதைக் கட்சியை விட்டு விலகினார் என்பது தான் உண்மை. ஆனால் நடந்தது, வேறு. சுயமரியாதைக் கட்சியை விழுங்கி விடலாம் என்று ஜஸ்டிஸ் கட்சி நினைத்து, அருகில் வந்தது— வந்த ஜஸ்டிஸ் கட்சியைச் சுயமரியாதைக்கட்சி விழுங்கிவிட்டது! சேலம் மாநாடு நடைபெற்றது, வல்லத்தரசு போனபிறகு!

10. திராவிடர் கழகத்துக்குத் தகுந்த கொள்கையில்லை என்றுவல்லத்தரசுகூறுகிறாரே, உண்மையா?

எப்படி உண்மையாக இருக்க முடியும்! எனக்குக் கல்கத்தா பிடிக்கவில்லை என்று இதோ கூறுகிறான் என் நண்பன்—கல்கத்தா போகாதவன்! வல்லத்தரசு, திராவிடர்கழகம் உருவான போதும், பிறகும் நம்முடன் இல்லாதவர். வெளி அரங்கில், அதிலும் மாற்றுக்கட்சி அரங்கிலிருந்து, திராவிடர்கழகத்தைப் பார்க்கிறார்—கொள்கை இல்லை என்று தானே அவருக்குத் தோன்ற முடியும்! மேலும் ஒரு காரணம இருக்கிறது, அவர் அவ்விதம் கூற. திராவிடர் கழகத்துக்குத் தகுந்த திட்டம் இருப்பதாக அவர் கூறினால், பிறகு, வேறு கட்சியில் இருக்க வேண்டாம் என்று அவருக்கு நீங்கள் கூறுவீர்களே! அதனால்தான—வக்கீல் அல்லவா—முதலிலேயே சிக்கு அறுத்துக் கொள்கிறார்— திராவிடர் கழகத்துக்குக் கொள்கை இல்லை என்று.

11. சேலத்தில்சின்னாட்களுக்கு முன்பு பேசிய போது, மா போ. சி. திராவிடர்கழகத்துக்குக் கொள்கை இல்லை என்று சொன்னார்—அது பற்றி உங்கள் கருத்து என்ன?

தத்துக்குப்போன மகனே, தாய் வீட்டைப்பற்றித் தவறாக எண்ணிப் பேசினாரே (வல்லத்தரசு) ம.பொ.சி. நெடுநாட்களாக நம்முடன் தாயாதிச் சண்டைபோட்டவராயிற்றே, வேறு எப்படிச் சொல்லுவார். மேலும்அவருக்கு, திராவிடர் கழகத்தின்கொள்கையை அறிய அவகாசம் இல்லை. கிடைக்கும் கொஞ்சநஞ்சம் அவகாசத்தையும், எல்லை குறித்துள்ள பழைய பாடல்களைத் தேடச் செலவிட்டு விடுகிறார், பெரும்பாணனார், காக்கை பாடினியார், ஆகியோரிலிருந்து கிளம்பி கப்பலோட்டிய தமிழன் வரையிலே பிரயாணம் செய்து களைத்துவிடுகிறார். திராவிடர்கழகக் கொள்கைகளை அவர் அறிந்து கொள்ளாததற்குக் காரணம் அதுதான். மெலிந்த உடல்—நொந்த உள்ளம்—எடுத்துக்கொண்டவேலையோ, பாரமிகுந்தது. ஆகவே அவரிடம், நமது கழகக்கொள்கைகளை உணர்ந்து கொண்டிருப்பார் என்று எதிர்பார்ப்பது, பயன் தராது.

12. காங்கிரசின் கொள்கைக்கும் திராவிடக் கொள்கைக்கும் உள்ள வேற்றுமை யாவை?

(அடுத்த பக்கம் பார்க்க)

பிரிட்டிஷ் உழவு முறை



(முன்பக்கத் தொடர்ச்சி)

அப்பப்பா! மிக மிகப் பழைய கேள்வி. புதிய முறையில பதில் சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். காங்கிரஸ்கொள்கையும் திராவிடர்கழகக் கொள்கையும், வேறு அல்ல—ஒன்றேதான்—காங்கிரசும் ராமராஜ்யம் கேட்கிறது திராவிடர்கழகமும் ராம்ராஜ்யந்தான் கேட்கிறது, காங்கிரஸ் ராமன், தவம் செய்த சம்புகன் தலையைக் கொய்தான் என்று கதை இருக்கிறது— திராவிட ராமன், அனைவரும் ஒருகுலம் என்று கூறும், சமதர்மக்கோட்பாடு கூறுகிறார். இருகட்சிகளுக்கும் வேறுபாடு, இந்தச் சூட்சமத்திலேதான் இருக்கிறது.

13. ஏழே மாதத்தில் ஏழு இலட்சம் என்ற தலைப்பில் எழுதிய விவரம் எந்தப் பத்திரிகையில், எந்தத் தேதியில் பிரசுரமாகி இருக்கிறது?

நண்பரே! பூராவலையையும் அலைக்கவைக்கிறீர்—நீரும் சற்று, தேடிப்பாரும்—நான், தேதியைக் கண்டு பிடிக்கும் வேலையை உமக்கே விட்டுவைக்கிறேன்—பத்திரிகையின் பெயரை மட்டும் கூறுகிறேன்—இன்டியன் எக்ஸ்பிரஸ்.

14. நீர் வேறு கட்சியில் சேருவதற்குப் பிரயத்தனம் செய்கிறீர் என்னும் வதந்தி உண்மையா?

வதந்திதான்! உண்மை அல்லாததற்குத்தான் வதந்தி என்று பெயர். பொருத்தமான பதம். பல வதந்திகளிலே, இது ஒன்று!!

15. திராவிடநாடு பத்திரிகையின் பெயரை மாற்றுவதற்கு சர்க்காரிடம் விண்ணப்பம் செய்தது உண்மையா? உண்மையென்றால் காரணம் என்ன?

நண்பர், கேட்பது சட்டசபையிலுள்ள கேள்வி முறையில்! அதே முறையில் பதிலளிக்க அவர் அனுமதிப்பார் என்று நம்புகிறேன். கேள்வியின் முதல்பகுதி அபத்தம், ஆகவே இரண்டாம் பகுதிக்கு அர்த்தமில்லை!

16. D. K. பட்டம்மாள் அம்மையார் பாடியுள்ள ஆடுவோமே என்ற இசைத்தட்டில், 'பார்ப்பானை ஐயனென்ற' அடியை மட்டும் ஏன் சேர்க்கவில்லை?

நண்பருக்குச்சற்றுச்சிரமமும் செலவும் வைக்கிறேன். இந்தக்கேள்விக்கு, விடை காணவேண்டுமென்றால், தஞ்சாவூர் சென்று, நடிகவேள் ராதா நடத்தும் நாடகத்தைப் பார்க்க வேண்டும். பதில் அங்குகிடைக்கும்—வயிறுகுலுங்கச் சிரித்துக்கொண்டே பதிலைக்கேட்டு விட்டு வரலாம்.

❀

பட்டிமன்றம்

கல்வித் திட்டம்

[நாகரத்தனம்]

நாட்டு மக்கள் நலன் கருதி கல்வித்திட்டம் தீட்டப்படல்வேண்டும். காலம் மாறும் முறைக்கேற்பக் கல்வி முறையும் மாறவேண்டும். விஞ்ஞான காலத்தில், விஞ்ஞானத் துணை கொண்டு மக்கள் வாழ்க்கை நலம் பெறும் வழியில் திட்டம் தீட்டப்படவேண்டும். ஒவ்வொரு நாடும் விஞ்ஞானத் துறையில் முன்னேறியிருப்பதும், அந்நாட்டு மக்கள் எல்லா நலன்கள் நுகருவதும், அவர்கள் கொண்ட கல்வித் திட்டத்தின் முறைதான். கல்வித் திட்டத்தினாலேயே ஒவ்வொருநாட்டுப் பொருளாதாரமும், அபிவிருத்தியும், செழிக்கின்றது.

நம்நாட்டிலேயோ தற்காலக்கல்வித் திட்டம், தாய் மொழிக்கு உயர்வு அளிக்கவில்லையே என்ற ஏக்கம் ஏதாவது இருப்பினும், பஞ்சம், பிணி, முதலியவை போக்கக் கூடியவாறு அமைந்திருக்கின்றதா— அமையாதிருந்தால் ஆளவந்தவர்களாவது திருத்தியமைத்திருக்கின்றார்களா என்றால், அதுதான் இல்லை.

உலகக் கல்வி நிலையை உற்று நோக்கும்போது நம் நாட்டுக் கல்வி நிலைமிகப்பிற்போக்கானது.

ஆளுபவன் ஆண்டவன் என்ற எண்ணம் எங்கும் இருக்கின்றதே தவிர ஆளுவோரும், ஆளப்படுவோரும் மக்கள் என்ற எண்ணம் ஏற்படவில்லை. விதியென்று கூறி மதியை மாய்த்துக் கொண்டனரே தவிர, உழைப்பால் உயர்ந்து, அறிவால் வாழும் பண்பு பெறவில்லை.

நடைமுறைத் திட்டத்தினால், வாலிப வாழ்க்கை வீணாகி, எதிர்காலம் செம்மையுற எத்தொழிலை நடத்துவது, எத்துறையில் புகுவது, என்று ஏங்க வேண்டியதாகின்றது. தற்காலத்திட்டம் செல்வம் நிறைந்த சீமான்கட்காகவே இருக்கின்றது. ஏழைகள், தொழிலாளிகள், விவசாயிகள், ஆகியோரின் குழந்தைகள் படிப்பதற்கும், படித்துப் பயன் பெறுவதற்கும் உகந்த முறையில் அமைக்கப்படவில்லை. அதனால்தான் நாட்டினில் யாங்கணும் தற்குறிகளே காணப்படுகின்றனர். தற்குறிகளைப் போக்குவதற்கு அரசியலார்தான் முயற்சியெடுத்தல் வேண்டும். பள்ளி செல்லாத பிள்ளைகளுக்கு அபராதம் என்பதனால்,பெற்றோர்கள் யாவரும் தம்பிள்ளைகளைப் படிக்கவைத்து விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது அவ்வளவு பலன் தராது.

16 வயதில் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, அடுத்து நடக்க வேண்டியது என்ன என்பதை சிந்திக்க வேண்டிய சிக்கலான நிலையிலே பலர் உள்ளனர்—பணம் படைத்த ஒரு சிலரைத் தவிர்த்து. படிப்பு முற்றுப்பெறாத காரணத்தினாலும், படித்தும் படித்ததற்கேற்ற பணி கிடைக்காத காரணத்தினாலும், பலருடைய வாழ்க்கை முறையே மாறி, அல்லல் நிறைந்த வாழ்க்கையில் சிக்கி, அவதிப்படுகின்றார்கள்.

அடிப்படைப் படிப்பிற்கு சம்பளம் (School Fees) என்பதே இருத்தல் கூடாது. சம்பளம் கட்ட இயலாது, படிப்பை விட்டு வாழ்க்கையையே பாழாக்கிக்கொண்டு, வயிறு வளர்ப்பதற்கு வழி தெரியாது, அலைந்து, பலகுற்றத்துக்கும் ஆளாகின்றார்கள். படிப்பற்றவர் நாட்டில் இருக்கக்கூடாது என்பதில் நாட்டம் இருக்குமானால் முதற்கண் சம்பளம் (School Fees) அகற்றி யாவரையும், 'ஆண், பெண்' படிப்பதற்கு வசதி அளிக்க வேண்டும். குடியிருப்பு எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் கல்விக்கூடங்கள் பெருக வேண்டும்—அரசியலார் செலவில் யாவரையுமே கண்காணிக்கப்பட வேண்டும்.

கல்வித் திட்டம் ஒவ்வொரு தொழிற்கு தகுந்தவாறு மாறவேண்டும். இன்ன தொழிற்கு இவ்வளவு படித்தால் போதும் என்று இருக்க வேண்டும். துவக்கக் கல்விக்குப் பிறகு தொழிற்கல்வியும், விருப்பப் பாடமும் போதிக்கப்படவேண்டும். பாட முறைகள் மாற்றியமைக்கப்

(அடுத்த பக்கம் பார்க்க)

அரிசிச் சுவடி

—❀—

1947ம் வருடம் ஆகஸ்டு மாதத்திலிருந்து 1948ம் வருடம் ஜூலை மாதத்திற்கிடையில் உலக அரிசி உற்பத்தி 705 கோடி புஷலுக்கு அதிகரிக்குமென்று இந்த அளவு சென்ற வருடத்தைவிட 15 கோடி புஷல் அதிகமானதென்றும் விவசாய இலாகா அறிவித்திருக்கிறது.

யுத்த நாசத்திலிருந்து சிறிது சிறிதாய்த் தேறிக்கொண்டு வரும் ஆசிய நாடுகளிடமிருந்தே பெரும்பாலும் அரிசி உற்பத்தி அதிகரித்து வருகிறது என்று சொல்லப்படுகிறது.

சென்ற வருடத்தைவிட இந்த வருடம் அரிசி உற்பத்தி அதிகரிக்குமென்றாலும், அது யுத்தத்திற்குமுன்னிருந்ததைவிட சுமார் 35 கோடி புஷல் குறைவானதாகவே இருக்கும்.

பர்மாவில் சென்ற வருடத்தைவிட இவ்வருடம் 9 லக்ஷம் ஏக்கர் அதிகப்படியாய்ப் பயிரிடப்பட்டிருப்பதனால் அங்குதான் கூடுதலான அரிசிகிடைக்கிறது என்றும், சென்ற வருடம் 19 கோடி 30 லக்ஷம் புஷல் அரிசி உற்பத்தி செய்த பர்மா அடுத்த அறுவடையில் 24 கோடி புஷல் அறுவடை செய்யுமென்றும் அறிவிக்கப்படுகிறது. சென்ற வருடத்தைபோலவே இவ்வருடமும் இந்தியாவில் 6 கோடி ஏக்கர் நிலமே சாகுபடி செய்யப்படுமென்றாலும் அறுவடை சென்ற வருடத்தைவிட கூடுதலாகவே யிருக்குமென்றும் உத்தேசமாய் இந்தியாவிலிருந்து 205 கோடி புஷல் தானியம் கிடைக்குமென்றும் அறிவிக்கப்படுகிறது.

சயாமில் சென்றவருடத்தை விட இவ்வருடம் 25 சத விகிதம் அதிகமாக அறுவடையாகும் என்றும் சென்ற வருடத்தில் 12 கோடி புஷல் தானியம் அங்கிருந்து கிடைத்ததென்றும் சொல்லப்படுகிறது.

சீனாவிலிருந்து 235 கோடி 30 லக்ஷம் புஷல்எதிர்பார்க்கப்படுகிறது. இது சென்ற வருடத்தை விட சிறிதளவே அதிகமானது.

அடுத்த வருடம் ஜூலை மாதத்திற்கு முன் பிலிப்பைனிலிருந்து 11 16,60,000 புஷல் தானியம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. யுத்தத்திற்கு முன்னிருந்த சராசரி அறுவடையை விட இது அதிகமானதேயென்றாலும் 1940-41 வருட அளவுக்கு வரவில்லையென்று சொல்லப்படுகிறது.

ஜப்பானில் சென்ற வருடத்தைப் போலவேதான் இவ்வருட அறுவடை இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் இவ்வருடம் 5 கோடி 42 லக்ஷம் புஷல் தானியம் கிடைக்கும். இது சென்ற அறுவடை காலத்தில் கிடைத்ததை விட 32 சத விகிதம் கூடுதலானதாகும்.

வட அமெரிக்காவிலும் ஆப்ரிக்காவிலும் அரிசி உற்பத்தி அதிகமாகி இருக்கிறதென்றாலும் தென் அமெரிக்காவில் மட்டும் உற்பத்தி குறைவடைந்திருப்பதாகத் தெரிகிறது

✲

(முன்பக்கத் தொடர்ச்சி)

படவேண்டும்—தற்காலத்திற்கு ஏற்றாற்போல. ஒவ்வொரு மனிதனுக்கும் மதிப்புக் கொடுக்கும் முறையில் புத்தகங்களை மாற்றியமைத்தல் வேண்டும்—மத சம்பந்தமான ஏடுகள்—பகுதிகள் பள்ளிகளில் புகுத்தல் தவறு. அவை ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட வேண்டும் — சிலர் விரும்பினால்.

ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் உள்ள சிறார்கள், சிறுமிகள், நாட்டு வளம், இயற்கை வளம், தொழில் வளம், மாண்புறு காட்சிகள் முதலியன கண்டு தம் அறிவை விசாலப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை அரசியலார் செய்து தரவேண்டும். இதுவே அவர்களின் எதிர்கால எண்ணங்களை உருவகப்படுத்தும். ஒவ்வொரு பையன், பெண் (மாணவர்கள்) முதலியோருடைய எண்ணக் குறிப்பு, ஆர்வக் குறிப்பு ஆசானிடம் இருக்கவேண்டும். சமையல் செய்வது பெண்களின் உடன்பிறந்த தொழில் என்பதனை மாற்றி அது ஒரு கலையாக்கப்படல் வேண்டும்.

பெண் கல்வி பேணுதல்—கல்வித் திட்டத்தின் முக்கியமான பகுதியாக இருக்கவேண்டும்.

ஒவ்வொருவரின் ஊக்கத்திற்குத் தகுந்தாற்போல் கல்விமுறை—திறம்—நேரம் மாற்றியமைக்கப்பட வேண்டும். துவக்கக் கல்வி முடிவதற்குள், மாணவரின் பண்பு, நோக்கம், ஆர்வம், முதலியன தெளியவேண்டும். தெளிந்ததற் கேற்றாற்போல், தேவைக்குத் தகுந்தவாறு கல்வி கற்றிடுமாறு செய்தல் வேண்டும்—வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் தலையெடுக்காதவாறு.

ஒவ்வொருவரும் தாய்மொழியில் புலமை பெறச் செய்ய வசதிசெய்து தரவேண்டும். பொது மொழி முன்னேற்ற மொழிகளில் ஒன்றாக அமையவேண்டும். நம் நாட்டு வரலாறு யாவரும் உணர்ந்திருக்க வேண்டும்.

★

பிரிட்டிஷ் பசு !



4-ம் பக்கத் தொடர்ச்சி

பாபமாச்சேன்னோ" என்று ஆமோதித்தார்.

* * *

திருமண வீட்டுக்குள்ளே ஒரு தனி அறையில், மாப்பிள்ளையின் செயலை அவன் நண்பன் பாராட்டிவிட்டு, அவனுடைய அபிப்பிராயத்தை ஆமோதித்தான். அந்த அபிப்பிராயம் என்ன? மாப்பிள்ளை "என்னமோ, இந்தக் கர்நாடக பேர்வழிகளை ஏமாற்ற எதை எதையோ உளருகிறான், ஒண்ணுக்காவது அர்த்தமோ அவசியமோ கிடையாது! எதையாவது சொல்லித் தொலைக்கட்டும் என்று இருந்தா, ஆசாமி, நம்ம பூகோள வாத்தியாருக்குமேலே ரப்பர் வாயனாக இருக்கிறான்! பார்த்தேன். "ஏ! ஐயர்! சுருக்கா முடி!" என்று கண்டிப்பாகச் சொன்னேன், சொன்ன உடனே பாரேன், மளமளன்னு பத்தே நிமிஷத்திலே சகலமும் முடிந்தது. அவனும் மூட்டையை கட்டி எடுத்துக்கொண்டு போய்த் தொலைந்தான்" என்று, சொன்னான்.

இந்த அபிப்பிராயத்தைத்தான் நண்பன் ஆமோதித்தான்.

* * *

"கலெக்டர் உத்யோகமாக் கூட இருக்கட்டும்டி புவனு, என்ன கௌரவம் இருக்கு. ஏதோ பணம் கிடைக்கும். போதுமோ? உன் புருஷன் புரோகித வேலை செய்து, உனக்கு அதிகமாக ஆஸ்திசேர்த்து வைக்க முடியாது, ஆனா, ஊரிலே உள்ளவர்களுக்கு, உன் ஆத்துக்காரரிடம், எவ்வளவு மதிப்பு தெரியுமோ? தேவதாகாரியமன்னோ அவர் செய்றது. பகவானுக்குக் காட்டுகிற மாதிரியான, பக்தி, விநயம், இவரிடமும் காட்றாளேன்னோ? இது யாருக்குக் கிடைக்கக் கூடிய பாக்கியம். பைத்யமே! புரோகிதனுக்கு வாழ்க்கைப்பட்டேனேன்னு விசாரப்படறயே!! நம்மகுலக்கௌரவமே அவாளுடைய கரத்திலேன்னோ இருக்கு" என்று, புவனாவின் நெருங்கிய உறவினர் N. G. O. நரசிம்ம ஐயர், கூறிக்கொண்டிருந்தார்.

உள்ளே நுழைந்ததும் "அடடே! ஏது, அத்தி பூத்திருக்கே. இந்தப் பஞ்சாங்கப் பிராமணனைத் தேடிண்டு, வந்திருக்கிறீரே ஓய்! சௌக்யந்தானே?" என்று குசலம் விசாரித்தார், புரோகிதர். சில நிமிஷப் பேச்சுக்குக்குப் பிறகு, புரோகிதர்.

"என்னதான் சொல்லும், வரவர, நேக்கு, இந்த வேலையே பிடிக்கல்லே. மதிப்பும் மங்கிண்டிருக்கு. பங்கிப் போச்சின்னே சொல்லலாம். ஏதோ, இன்னமும், பழய கால முறைப்படி நம்மை அழைக்கிறான்னு சொல்லுவீர். அழைச்சி, என்ன செய்யறா தெரியுமோ? அந்தக் கர்மத்தை ஏன் கேட்கிறீர். மகா கேவலமா நடத்தறா. சரி, சரி, ஆகட்டும். நீ செய்கிற வேலைக்கு இதுபோதாதோ. மூட்டையா சுமக்கறே, எதையோ இரண்டு மூணு முணுக்கிறதுக்கு, கட்டுகிற மூட்டை போதாதோ—இப்படி எல்லாம் வம்புப் பேச்சு பேசறா. நெஜமாச் சொல்றேன் ஓய், உங்க ஆபீசிலே இருக்கானே 'டவாலி சேவகன்' அவனிடம் காட்டுகிற அளவு மதிப்புக்கூட, புரோகிதனிடம் காட்டுவது இல்லே. நான் யோசிச்சிண்டேதான் இருக்கிறேன், இந்தச் சனியன் பிடிச்ச வேலையை விட்டுத் தொலைத்துவிடணும்னு"—என்று கூறுகிறார்.

புவனேஸ்வரியின் முகத்திலே, ஓர் வெற்றிக் களை.

"இப்ப, என்ன சொல்கிறீர்.', என்று கேட்டாள், பார்வையால், புரோகிதரின் பெருமையைப் பற்றிப் பேசியவரை.

அவர் மனக்கண்முன்னே, ஓர் காட்சி தெரிந்துகொண்டிருந்தது அதேபோது. அவருடைய மனைவி, தன் பெண்ணை இழுத்துக்கொண்டு வந்து அவர் எதிரே நிறுத்தி, "என்ன சொல்கிறா கேளுங்கோ, இந்த வாயாடி" என்று கூறுகிறாள்.

"என்னடி சொன்னே, ஏழு! சொல்லு" என்று இவர் கேட்கிறார்.

ஏமலதா "கிணற்றிலே குட்டையிலே விழுந்தாலும் விழுவேன், பஞ்சாங்கப் புரோகிதனை மட்டும் கலியாணம் செய்துகொள்ளவே மாட்டேன். அப்பா! அவாளைப் பார்த்தாலே, அவலட்சணமாக இருக்கு. நேக்குத் துளிகூடப் பிடிக்கறதில்லே, அவாளுடைய பேச்சும் போக்கும்" என்று பேசுகிறாள். அவரும் அவளும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறார்கள்.

* * *

அவர்கள் மட்டுமா! உலகம் சிரிக்கிறது! ஊர் சிரிக்கிறது! என்றாலும், இந்தக் காரியம் நடந்தவண்ணமுமிருக்கிறது. வாடிய மலரை வீசி எறிகிறோம், வாடை கண்டுவிட்ட உணவுப் பொருளைத் தின்பதில்லை, உடைந்த கண்ணாடிப் பாத்திரத்தைக் குப்பை மேட்டில் எறிகிறோம். ஆனால், மதிப்பிழந்த முறையை மட்டும், இன்னும் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறோம். புரோகிதருக்கே இதிலே நம்பிக்கை இல்லை, அவர் வீட்டிலே இதற்குமதிப்பில்லை, புரோகித முறைப்படி காரியம் செய்து கொள்பவர்கள், மதிப்பு அளிப்பதில்லை. எனினும், இந்த முறையை நடமாடவைத்துக் கொண்டிருக்கிறோம், ஓட்டைகளை அடைத்து, ஒடிசலை மறைத்து! உலகம் சிரிக்காமலிருக்குமா!!

அறிவின் வழிச்செல்பவனுக்கு வாழ்க்கை ஒருஹாஸ்ய நாடகம்; உணர்ச்சியின் வழிச் செல்பவர்களுக்கு அது ஒரு சோகநாடகம்.

வால்போல்.

நமது சொஸைடியின் அபிவிருத்திக்கு ஆதரவளித்த ஒவ்வொருவருக்கும்

புதுவருஷ வாழ்த்துக்கள்

தமிழர் ஸ்தாபனத்தை ஆதரித்த தமிழர்களின் கடமையை நிறைவேற்றுங்கள்

இந்தியா லைப்பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்,
தமிழர் நிலையம்,
கோயமுத்தூர்.

பொங்கல் வாழ்த்துகள்!
என்னெஸ்கே
பிலிம்ஸ்....
& உமா பிக்சர்ஸ்
தயாரிப்பு.
கிருஷ்ணன், மதுரம்
பானுமதி நடிக்கும்
நல்லதம்பி
சென்னை நியூடோனில் தயாராகிறது
கதை, வசனம்:
C.N. அண்ணாத்துரை. M.A.
டைரக்ஷன்:
கிருஷ்ணன், பஞ்சு
விவரங்களுக்கு: என்னெஸ்கே பிலிம்ஸ்
6. வெங்கட்டராமய்யர் தெரு
தியாகராய நகர், மதராஸ்

இடமும் இயல்பும்

—●—

ஒரு ஜெர்மன்காரரை எடுத்துக் கொண்டால் அவர் ஓர் விஞ்ஞானியாயிருப்பார்.

இரண்டு ஜெர்மானியர் கூடினால், சதிவேலை நடக்கும்.

மூன்று ஜெர்மானியார் சேர்ந்தால் போர்த் திட்டம் தயாரிக்கப்பட்டு விடும்.

ஒரு அமெரிக்கரை எடுத்துக் கொண்டால் சர்வம் டாலர் மயம் என்று எண்ணுவார்.

இரண்டு அமெரிக்கர் சேர்ந்தால் ஒரு கார்ப்பரேஷன் (கம்பெனி) ஆரம்பமாகிவிடும்.

மூன்று அமெரிக்கர் சேர்ந்தால் பூலோகத்தை இன்பபுரியாக்கும் வேலை செய்வதாகக் கூறி, ஆரம்பிப்பர்.

ஒரு ஆங்கிலேயரை எடுத்துக் கொண்டால் அவர் முட்டாளாக இருப்பார்.

இரண்டு ஆங்கிலேயர் கூடினால், இரண்டு முட்டாள்கள்தான்.

மூன்று ஆங்கிலேயர்சேர்ந்தாலோ, ஒரு பெரிய வல்லரசு அமைக்கும் யோசனை ஆரம்பமாகிவிடும்.

ஒரு இந்தியரை எடுத்துக்கொண்டால், அவர் தத்துவ விசாரத்தில் மூழ்குபவராக இருப்பார்.

இரண்டு இந்தியர் சேர்ந்தால் ஒரு விவாதம் ஆரம்பமாகும்.

மூன்று இந்தியர்கள் கூடினால் குழப்பந்தான்!

ஒரு பிரன்சுக்காரரை எடுத்துக் கொண்டால் 'ஜோடி' ஏற்படும்.

இரண்டு பிரன்சுக்காரர் சேர்ந்தால் ஒரு அரசியல் கட்சி உருவாகும்.

மூன்று பிரன்சுக்காரர்சேர்ந்தால், அப்போதுள்ள அரசாங்கத்தை மாற்றும் வேலை ஆரம்பமாகும்!

பலநாட்டு மக்களின் பண்புகளை, படிப்பால் மட்டுமல்ல, அங்குசென்று கண்டறிந்த கிருஷ்ணலால் சிதரணி என்பவரின், உரை, மேலே காணப்படுவது.

அவருடைய 'முடிவுகள்' விவாதத்துக்குரியனவாக இருக்கலாம். ஆனால், பொதுவாக உள்ள உண்மை ஒன்று அவர் உரையில் தொக்கியிருப்பதை மறக்கக் கூடாது. ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும், ஏதோ ஓர் வகையான தனியான குணம், இருக்கிறது! இந்த இயல்பு ஏன்?

இடத்துக்கேற்றபடி இயல்புஅமைகிறது, என்ற பொதுத் தத்துவமே, இதற்குக் காரணம், என்று, ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

தனி மனிதன் எங்ஙனம் சூழ்நிலைக்கு ஏற்ப, இயல்புகள் பெறுகிறானோ, அது போலத்தான் 'கூட்டமாக' இருக்கும் மனிதர், என்ற பொருள்படும், 'இனம்' கூட இருக்க முடியும்.

கொல்லனின் கரமும் பூ மாலை தொடுப்போனின் கரமும் எங்ஙனம் ஒரே விதமாக இராதோ, அதே போலத்தான், போலந்துநாட்டவருக்கும் போர்ச்சுகல் நாட்டவருக்கும் ஒரேவிதமான இயல்புஇருப்பதில்லை. ஒவ்வோர் இனத்துக்கும் ஒவ்வொரு வகையான இயல்பு அமைந்துவிடுகிறது' இந்த இயல்பு, மாற்றவே முடியாதது அல்ல; இந்தஇயல்புக்குககாரணமாக உள்ள இடத்தைக் கூட மாற்றி விடவும் முடியும். ஆனால், இடத்துக்கேற்றபடி இயல்பு அமைகிறது என்ற பொதுஉண்மை, பெரும்பாலும் பொய்யாவதில்லை. தட்ப வெட்ப நிலைக்கேற்ப, இயல்பு அமைகிறது; இடத்துக்கேற்ற இயல்பு. அரசியல் இலட்சியங்களும், அமைப்புகளும் ஏற்படுவதும், காட்டின் தட்பவெட்ப நிலைக்குத் தக்கபடியே இருப்பதும் காணலாம்.

வெளி நாடுகளுடன் ஏற்படும் தொடர்பு முறையும், அந்தநாட்டின் பூகோள அமைப்பை ஒட்டியதாக ஏற்பட்டுவிடுகிறது. கடலோரமுள்ள நாடு, தக்க பாது காவலின்றி இருக்குமானால், அந்நாடு, கடற்படைப் பலமமைந்த அண்டை அயல் நாடுகளுடன் நேசம் கொண்டாடி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும். இயற்கையில் ஏற்படும் இடையூறைப்போக்க அந்நாடு இவ்விதமான போக்கை மேற்கொண்டாக வேண்டும். சுற்றுச் சார்புக்கேற்ற முறையிலேதான் எண்ணங்களும் ஏற்பாடு

(9-ம் பக்கம் பார்க்க)

24-ம் பக்கத் தொடர்ச்சி

துறையிலே, வடமொழி தந்துள்ள அருமையான தத்துவங்களைப் படித்து இன்புறு, என்று ஜாலம் செய்கின்றனர்.

சொல்கிறார்கள், வடமொழியாளரின் கலையின் மேன்மையினால், மனிதத் தன்மைக்கு மேம்பாடு தரப்பட்டதாம்!

மனிதத் தன்மைக்கு மேம்பாடு! இதனுடைய முதிர்ச்சிதான், எட்டுக் கோடி மக்கள், இந்நாட்டுக் காவலர்கள், பார்க்கவோ தொடவோ, படாதவர்கள் என்று ஊருக்கு வெளியே, நாகரிககதிற்கு புறமே, ஒதுக்கி வைக்கப்பட்டு, அடிமைகளாய், உழைத்து உழைத்து வாடவேண்டிய வர்க்கத்தினராய், உடை, உணவு, உருவம், ஆகிய எல்லாவற்றிலும், யாரோ, எந்நாட்டவரோ, என்று ஐயுறும்படியான விதத்திலே ஆக்கப்பட்டு, "தீண்டாதவராய்"—"பஞ்சமராய்" கொடுமைப் படுத்தப் பட்டது போலும்!

மனிதத்தன்மையின் மேம்பாட்டுக்கு மதிப்புக் கொடுத்ததால்தான், ஒரு வகுப்பார் பூதேவராகி, பூசுராகி, ஆண்டவரின் தரகராகி, பிறர் சூத்திரராக்கப்பட்டனர்!

சனாதனி, குதூகலத்துடன் குறிப்பிடும் மனிதத்தன்மையின் மேம்பாட்டுக்குத் தரப்பட்ட மதிப்பின் காரணமாகத்தான் மனு வேதத்தைப் படிக்கும் சூத்திரனின்நாவைத் துண்டிக்கச் சட்டமிட்டான்! கேட்ட காதிலே ஈயத்தைக் காய்ச்சியூற்ற உத்தரவிட்டான்! பார்ப்பனர் அமர்ந்த இடத்திலே 'பதட்டமாக' பிறிதொருவன் அமர்ந்தால், அவன் அங்கங்களைத் துண்டிக்கச் சொல்லி எழுதி வைத்தான்.

ஐயோ! மனிதத்தன்மையின் மேம்பாடே! வடமொழியாளர் உன்னை வளர்த்தனராமே!

மனிதத்தன்மையை, மிருகத்தனமாக்கியது, ஆரியக் கலாசாரமும் அதனால் விளைந்த விபரீதச் சேட்டைகளுமேயாகும்.

கங்கைக் கரையில்!

கண் கவரும் காட்சி! சொல்லுந் தரத்ததன்று அந்தப் பூந்தோட்டத்தில், குயில் கூவிற்று! மயில்மற்றொரு புறம் மகிழ்வுடன் ஆடிற்று! மலர்கள், பலவித வர்ணங்களுடனும் வகையுடனும் காட்சியளித்தன! மெல்லிய தூறலிலே, இருதயத்தை உருகச்செய்யும் இசை. அதனை, இணையில்லா அழகுள்ள, இளமங்கை ஒருத்தி பாடிக்கொண்டிருந்தாள். சொக்கினான் இளைஞன்! யுவதியை அணுகினான், உடனே, சூழ இருந்த செடி மறைவிலிருந்து பாய்ந்துவந்து, கொலைஞர்கள், அவனைப் பிடித்துக்கொன்றனர்! குமரியை நம்பி, அவள் குரலொலியிலே மயங்கினான்! மாண்டான்! புன்னகைப் பூங்காவில் புகுந்தான், பிணமானான்!

இதற்குத்தான் நாட்டிலே, ஆரியம் தீட்டிக்காட்டிய கவிதை, கலை, மதம் ஆகியவற்றில் சொக்கிச்சிக்கிய தமிழர், கருத்தழிந்து கெட்டதற்கும், அதிக வித்தியாசமில்லை.

இயற்கையை வணங்கி, இறைவன் ஒருவனே, அவன் எங்குமுள்ளான், எவ்வுருவுமில்லான் என்ற சீரிய கொள்கையுடன் "யாதும் ஊரே" என்று பரந்த நோக்கங் கொண்டு எல்லோரும் சோதரர் என்ற கருத்துடன் வாழ்ந்து வந்த தமிழரை—திராவிடரை—நந்தவனத்து நங்கையைக் காட்டி இளைஞனைக் கொன்ற கதை போல, பல்வேறு கலையையும், அலங்காரக் கற்பனைகளையும் காட்டிக் காட்டி, மயக்கியே கெடுத்தது பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, பரந்த சிந்து கங்கை முதலிய நதிகளின் தீரத்திலே குடிபுகுந்த ஆரியம். முலாமில்லாத தங்கத்தைப் பெற்று, இன்ப வாழ்வு வாழ்ந்து வந்த தமிழரிடம், கோபிகைகளுடன் கூடும் கடவுளையும் கோயிலிலே கூத்தியுடன் குலாவும் கடவுளையும், தேவி மகன் ஒருவன், பிறநாமக் கருவிகள்பால் தோன்றியவர் வேறு, என்ற அளவுக்கு வந்த கற்பனைக் கடவுள்களையும் காட்டி, மயக்கியதுடன், தமிழரின் தனிக் கொள்கையை மாய்த்தது.

சாதி என்ற சொல்லை அறியாத தமிழரிடை, நால்வகைச் சாதியைப் புகுத்திற்று. பேதமற்ற வாழ்க்கை நடாத்திய தமிழரிடையே விபரீத வர்ணாஸ்ரமத்தைப் புகுத்திற்று. இவைகளால் வேதனைப்பட்ட நேரத்திலே, விதவிதமான கற்பனைகளையும், காட்டி, தமிழனின் உண்மை உணர்ச்சியை மாய்த்தது வீரத் தமிழனை வீணாக்கி விட்டது வெளியிடத்து கலாசாரம்.

இந்த முறையில் அந்த நாளில், ஆரியம் தமிழரை அழித்தது! இன்று நடப்பதென்ன?

புத்துணர்ச்சி பெற்ற தமிழர், பார்ப்பனீயப் புரட்டைக் கண்டு கொண்டனர். வைதீகக் கட்டிலிருந்தும், வர்ணாஸ்ரமக் கொடுமையிலிருந்தும் மீளுவதற்கு மார்க்கமெது என ஆராயத் தொடங்குகின்றனர்.

இது ஆரியத்தை ஆதரிப்போருக்குப் பிடிக்காது என்பது இயற்கை! இதனை அவர்கள் எதிர்த்தே தீருவார்கள் என்பதும் நமக்குத் தெரியும். ஆனால், நேரடியாகத் தாமே எதிர்த்தால், காரியம் ஏதும் நடவாது என்று தெரிந்து கொண்டதால், இந்த கலைப்போரை, ஆஸ்திக—நாஸ்திக சம்வாத ரூபமாக்கிப் பொது மக்களிடம் காட்டி, பொல்லாங்கு பேசுகின்றனர்.

இதன் அறிகுறியாகவே, இப்போது, பேசுகிறபோதெல்லாம், பொதுவாக பிரபல ஆரிய ஆதரவாளர்கள் இந்த ஆரியர்- திராவிடர் என்ற பேதம் கூடாது என்றும், அதைப்பற்றிப் பேசுவதே ஆபத்து என்றும் சொல்லி வருகிறார்கள்.

வடமொழியில் வகுக்கப்பட்டுள்ள, வகுப்பு நீதிகளை நாம் எடுத்துக் காட்டினால் அவை எப்போதோ இருந்தவை, இன்று செத்தன, செத்ததை ஏன் எண்ணி எதிர்க்கவேண்டும், என 'சமர்த்தாக'ப் பேசுகின்றனர்.

வர்ணாஸ்ரமம் கூடாதே, அதனால் விபரீதம் இன்னின்ன வருகின்றனவே என்று எடுத்துக்காட்டிக் கேட்டால், தொழில் முறைக்காக, ஜாதிப் பிரிவு ஏற்பட்டதே தவிர, வேறில்லை. இதனால் ஒரு தவறுமில்லை—என்று வாதம் செய்கின்றனர்.

நாம், வடமொழி மூலமே, நம் தமிழரின் தனிக்கலையும், கருத்தும் அழிக்கப்பட்டது என்பதை எடுத்துக்காட்டும் போது, வடமொழி முன்னோர்மொழியாயிற்றே, அதைக் குறைகூறலாமா, என்று உருகி விடுகின்றனர்.

வடமொழிப் பயிற்சிக்கு ஏதோ ஒரு சிறு தடை இருப்பதாகத் தெரிந்ததும், பல இடங்களிலே கூட்டங்கள் போட்டு, பண்டை நாகரீகத்தின் சித்திரம் வடமொழி மூலமே காண முடியுமென்றும், வடமொழி அழிந்துவிட்டால், "அந்த பண்டைப் பெருமை" பாழாகுமென்றும், பசப்புகின்றனர்.

வடமொழிக்கு செல்வாக்கு அழிவதைக் கண்டே, அதன் வழிவந்த இந்தியைப் புகுத்த எவ்வளவோ பாடுபடுகின்றனர்.

ஐயனே! வடமொழியினால் வந்த வம்புதான் வர்ணாஸ்ரமம்! இதோ மனு வைப்பார்! என்று நாம் எடுத்துக் காட்டினால், இவர்கள் காளிதாசனின் கவிதையைப் பார், ஆத்மீகத்

(23-ம் பக்கம் பார்க்க)



வண்ணப்புருவே, நீயார்!

சாரங்கதரன் கரத்திலிருந்து பறந்து சென்று சித்ராங்கியின் கருத்தைக் கெடுத்த, புறாதானே நமக்குத்தெரியும். இந்தப்புறா, காதல் தூதனல்ல! கடும்போரில் ஈடுபட்டு பணியாற்றியது. ஜப்பானியர்கள் பர்மாவைக்கைப்பற்றி அட்டகாசம் செய்தபோது, இந்தப்புறாவின் மூலமாகத்தான் தபால் அனுப்பப்பட்டது. பெரியமலைகளையும் பிரம்மாண்டமான காடுகளையும் கடந்து, இந்தப்புறா, 225-மைல் பறந்து சென்று, தபாலைச் சேர்த்தது,

Edited Prined Publised by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi Street. Conjeeveram.